உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 42 ] துந்துபி ஆண்டு மார்கழித் திங்கள் 10-1-83 [ இதழ் 2

தம்மைச் சூழ்ந்து தான்யக கதிர்கள் விளைந்து முதிர
தம்கையில் தானியக் கதிரேந்தி, உலகெலாம் பசியும் பிணியும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க அருள்பாலிக்கும்



அன்னை தான்யலட்சுமியின் திருக்கோலம்.

உழவர் திருநாளாகிய பொங்கல் திருநாளை முன்னிட்டு
இவ்விதழில் காட்சிதருகின்றது.

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[★]—

மிண்டுசெய்யு மும்மலமு
  மிக்கவினை நல்குரவும்
பண்டுபோ லென்னைவந்து
  பற்றுமற் — கொண்டுபோய்
நின்னருளிற் சேர்க்க
  நினைகண்டாய் தென்மதுரை
மன்னவனே சொக்கநா தா.

— சில பிரதிகளில்
காணப்படும் பாடல் 2

ஆசிரியர் :-
வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
**சி அருணைவடிவேல் முதலியார்**

உ
குருபாதம்

# " ஞானசம்பந்தம் "

**தருமையாதீனத் திங்கள் இதழ்**

மலர் 42 | 10–1–83 | இதழ் 2

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | பொங்கல் புதுநாளில் புதிய சிந்தனைகள் | ... 49 |
| 2 | தருமைஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை | ... 53 |
| 3 | தைமகளே வருக ! | ... 59 |
| 4 | தையில் நீராடிய தவம் | ... 61 |
| 5 | திரு அகத்தியான்பள்ளி, திருக்கோடிக்குழகர் தலச் சிறப்புக்கள் | ... 65 |
| 6 | கடிதம் | 64, 71, 96 |
| 7 | சிவநாமாவளி இசைப்பாடல் | ... 73 |
| 8 | அபிராமி அந்தாதி | ... 74 |
| 9 | நாவலர் நாட்டார் ஐயாவின் நல்ல பெருவிளக்கம் | ... 79 |
| 10 | செய்திகள் | ... 83 |
| 11 | எதிர்காலம் | ... 91 |

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 23
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 25
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 125
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 250

திருச்சி மலைக்கோட்டை ஸ்ரீ தாயுமானசுவாமி திருக்கோயில்
மகா கும்பாபிஷேகம் 29—8—66 அன்று நடைபெற்றபோது



தருமையாதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்
முன்னிலையில் யாகசாலையிலிருந்து கடம் எழுந்தருளும்காட்சி

உ
சிவமயம்

# திருச்சிராப்பள்ளி
# ஸ்ரீ மட்டுவார்குழலி உடனுகிய ஸ்ரீ தாயுமான சுவாமி திருக்கோயில்

# அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

## 26—1—1983 புதன்

தமிழ்நாட்டின் நடுநாயகமாக விளங்கும் நகரம் திருச்சிராப்பள்ளி. இந்நகருக்கு அழகும்பெருமையும் சேர்ப்பது அருள்மிகு தாயுமானவர் திருக்கோயில். இவ்வாலயம் புராணவரலாற்றுச் சிறப்புக்கள் பலவற்றை உடையது.

திருக்கயிலைமலைச் சிகரங்களில் ஒன்றே இங்கு உள்ளமலை என்றும் அதனால் இத்தலம் தென்கயிலாயம் என்றும் தலபுராணம் கூறும். பிரமன், அகத்தியர், இந்திரன், உமையம்மை, சடாயு, சப்தரிஷிகள், திரிசிரன், இராமஇலக்குமணர், இரத்தினவதி, மௌனகுரு, தாயுமானவர் முதலானோர் வழிபட்டு அருள் பெற்ற புராணவரலாறுகள் இத்தலத்திற்குள்ளன.

அப்பர் சுவாமிகள் காலத்தில் சமணர்களோடுகூடி அப்பருக்கு இடரிழைத்துப்பின் சைவத்தின் பெருமையை உணர்ந்து சைவனாகமாறிய மகேந்திரவர்மப்பல்லவன் இங்குள்ள மலையில் செய்வித்த குகைக்கோயிலும், தான் சைவனாகமாறியதைக் குறித்து அவன் எழுதுவித்த இக்கோயிலிலுள்ள கல்வெட்டும் வரலாற்றுப் புகழுடையன.

வணிகப் பெண்ணின் மகப்பேற்றுக்கு அவள் தாய் போல்வந்து தலையளி செய்ததால் பெருமான் தாயுமானவர் எனப் பெறுகிறார். ஞானசம்பந்தர் அப்பர் தேவாரத் திருப்பதிகங்களைப் பெற்ற தலம் இது. 'நன்றே உடையான் தீயதே இல்லான்' என்றும் அப்பெருமானது புகழைக் கூற 'என் உள்ளம் குளிரும்' என்றும் அருளிச் செய்கிறார் ஞானசம்பந்தர். திருச்சிராப்பள்ளி என்று சொன்னாலே தீவினை அகலும் என்கிறார் அப்பர்.

சமய, வரலாற்று உலகில் புகழ்பெற்ற இத்திருக்கோயிலில் விளங்கும் ஸ்ரீதாயுமானவருக்கும் ஸ்ரீமட்டுவார் குழலம்மைக்கும், மாணிக்க விநாயகர், உச்சிப்பிள்ளையார் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கும் **26 — 1 — 83 புதன் கிழமை காலை 9 க்குமேல் 10–30 மணிக்குள்** தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம், காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் ஆகிய அருட்குரவர்கள் முன்னிலையில் மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற இருக்கிறது. திருச்சிராப்பள்ளியிலுள்ள தருமையாதீனம் மௌனமடம் கட்டளையிலிருந்து ஸ்ரீ தாயுமானஈசர், திருக்கோயிலில் ஷை கட்டளை நிர்வாகத்திற்குட்பட்ட கோயில்கள் மண்டபங்கள் ஆகியவற்றுக்கு ஒருலக்ஷரூபாயளவில் திருப்பணிகள் செய்விக்கப்பெறுகின்றன. ஷை மகாகும்பாபிஷேகத்தை ஒட்டி 24, 25, 26—1—83 மூன்று நாட்களும் திருமுறை மாநாடும், சிவபூசகர்கள் மாநாடும் சிறப்பாக நடைபெறும்.

அன்பர்கள் வருக! தரிசித்து அருள்பெறுக!!

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 42 | துந்துபி - மார்கழி - 10—1—83 | இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— ஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## பொங்கல் புதுநாளில் புதிய சிந்தனைகள்

எந்தஒரு நாட்டின் பெருமையும், அங்கே வாழும் மக்களின் இயல்புகளைச் சார்ந்தே அமையும். நில வாரங்களைவிட, மனித மனவாரங்களே பெருமைதரும். 'எவ்வழி ஆடவர் நல்லர்; அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்று சங்கப்புலவர் ஔவையார் இதனைவற்புறுத்தினர். இயற்கையிலேயே மனிதன் விலங்கின் குணம் உடையவன். சமூகமே அவனிடம் பண்பாட்டுக் கூறுகளை உருவாக்குகின்றது. சமூகத்தின் இம் முயற்சியில் அறநூல்களும், சமயங்களும், சான்றோர்களும் பெரும்பங்கு வகித்தனர். மனிதப்பண்புகளை வளர்ப்பதிலும், விலங்குப் பண்புகளை அகற்றுவதிலும் பல்வேறு சான்றோர்கள் மகத்தான முயற்சிகளை மேற்கொண்டும் உரியபலன் கிட்டிய பாடில்லை. தன்னலமும், கீழ்மையும், ஒழுக்கமின்மையும் மக்களை முற்றிலும்விட்டு நீங்கியதாகத் தெரியவில்லை. இது குறித்து அடிக்கடி தற்சோதனை செய்து கொள்ளுதல் மனித இனத்துக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

**கற்றபடி நிற்க :**

கடந்த இருபது நூற்றாண்டுகளில் சமூக, பொருளாதார, அரசியல் அமைப்புக்களில் மனித இனம் பெற்ற வளர்ச்சி பெரு மிதத்துக்குரியது. விஞ்ஞான வளர்ச்சியில் அண்டங்களையே அளந்தறியும் ஆற்றல் நமக்குக்கைகூடியுள்ளது. புற உலக வாழ்வில் வெற்றி பெற்ற மனிதன், அகவாழ்வில் – நெஞ்சார்ந்த தனிவாழ்வில் தன்னலமும், நாணயமின்மையும் மிக்கவனாக உருவாகிவருதலை மறுத்தல் இயலாது. அறநூல்களை ஆராயவும் ரசித்துமகிழவும் கற்றவன், அதனைப் பின்பற்றக்கற்க மறந்தான். அறிவாராய்ச்சியால் சமய உண்மைகளைக் காணத் தலைப் பட்டானே அன்றி, அவை கூறும் வாழ்க்கை நெறிமுறைகளைப் போற்ற முன்வரவில்லை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற விரிந்த எல்லை சுருங்கி, தன்பெண்டு, தன்பிள்ளை, தான் என்ற சிறியவட்டத்துக்குள்ளே மனிதன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பது நன்கு புலனாகிறது.

**உழைத்து உயர்க :**

பண்பாடு – மற்றும் மனிதாபிமானத் தன்மைகளால் சிறந் திருந்த தமிழ்மக்களையும் இந்தக் குறைபாடுகள் பற்றிக் கொண்டன. நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த உழைத்த நமது முன்னோர் வழிவந்த நாம், இன்று உழைப்பை வெறுக்கிறோம். குறைந்த உழைப்பில், நிறைந்த ஊதியம் பெற்றுவிடவேண்டு மென்ற முனைப்பும் – முயற்சியும் பெரும்பாலானவர்களிடம் நிறைந்துள்ளன. 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ?' என்ற வினவும், 'ஊழையும் உப்பக்கம் காணலாம்' என்ற தெளிவும் இருந்தும் உழைப்பைப் போற்ற மறந்தோம். குறுக்கு வழிகளில் பணம் ஈட்டல், பரிசுச்சீட்டுக்களால் லட்சாதிபதி ஆதல், லஞ்சத்தால் செல்வ வாழ்க்கை வாழ்தல் போன்ற உழைப்பை உதாசீனப் படுத்தும் வழிமுறைகளில் நாம் நீளச் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறோம். உழைக்காத தனிமனிதர் களோ, அன்றி நாடோ சமூக வாழ்வில் உயர்நிலை எய்தியதாக வரலாறு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

**பொய்யை மெய்யாக்காதே :**

சமூக ஒழுக்கங்கள் இன்று எவ்வாறு புறக்கணிக்கப் பட்டுள்ளன என்பதை நாட்டு வளர்ச்சியில் ஈடுபாடு உடைய வர்கள் சிந்திக்கவேண்டியதருணம் இது. ஒழுக்கக்கேடுகளையே–

ஒழுக்கங்களாகவும், வக்கிரமான முரண்பாடுகளையே – நேர்மையான உண்மைகளாகவும், தவறுகளையே – நியாயங்களாகவும் சித்தரிக்கும் பேச்சு மற்றும் எழுத்துக்களால் நாம்பெரிதும் குழப்பமடைந்துள்ளோம். நமது ஏடுகள் வாழ்வின் இருண்ட பகுதிகளை ஒளியூட்டிச் சித்தரிக்க முயல்வதில் ஒரு சிறு பகுதியாவது, வாழ்வின் உன்னத லட்சியங்களைச் சித்தரிக்க வேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகள் அரும்பும் அறிகுறிகளே இல்லை. எங்கே போகிறோம் என்ற தெளிவே இல்லாத மக்களை, எங்கே அழைத்துப் போகிறோம் என்று தெரியாத ஏடுகள் பெரிதும் சீர்குலைப்பதை ஒழுக்க உணர்வுடையார் கண்டு மனம் குமுறுதல் அன்றி வேறு வழியறியாது திகைக்கின்றனர்.

## தூண்துரும்பானால் ?

கல்வி, கல்விக்கூடங்கள் – கற்பார்–கற்பிப்பார் நிலைகளைப் பேசுவது பலருக்கும் எரிச்சலூட்டும். என்றாலும் புண்ணை புரையோடவிடுவது உயிருக்கே கேடுவிளைக்கும். வாழ்க்கைக்கு உதவாத கல்வி – பணம் பண்ணுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கும் கல்விநிலையங்கள் – எங்கே போகிறோம் என்ற தெளிவே இல்லாது கற்கும் இளைஞர்களிடம் – தொண்டாக நினைக்க வேண்டுவதைத் தொழிலாகக் கருதி – அன்பின்றிச் செயற்படும் கற்பிப்பார் என திசைதெரியாது போய்க் கொண்டிருக்கும் அவலம் நாளும்வளர்ந்துவருதலை அனைவரும் அறிவர். எதிர்காலச் சமூகத்தின் தூண்களாக உருவாக வேண்டிய இளைஞர்கள் – திரைப்படம் – அரசியல் – சோம்பல் முதலியவற்றால் துரும்புகளாக மாறிவரும் அவலம் நாட்டுக்கு நல்லதாகாது, சோதனை நிலைகளிலேயே கல்விக் கூடங்களைப் பாழ்படுத்தாது, உன்னதமான சமூகத்தை உருவாகத்தக்க வளமனைகளாக அவற்றை மாற்றும் நாள் விரைவில் மலரும் அறிகுறிகளுக்காகக் காத்திருப்போம்.

## கேட்டினும் உண்டு ஓர் உறுதி :

இதனால் எல்லாம் சமூகம் முற்றிலும் சீர்கெட்டுவிட்டது என்பது பொருளல்ல. 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற உயர்மொழிக்குக் காவலர்களாக இன்னும் பலர் நம்மிடையே வாழ்கின்றனர். அவர்களை உலகுக்குக் காட்டி உயர்நெறிகளைப் போதித்து ஒளிமிக்க உலகைப் படைக்கும் திறம் நமக்கு வேண்டும். நம்மிடையே இன்று மலிந்துள்ள குறைபாடுகளை நினைவு கூர்ந்து, காலப்போக்கில் களைந்து கொள்ளும் பண்பு

உருவாகவேண்டும். நாட்டில் ஒவ்வோர் மனிதனும் ஓர் அங்கம். எந்தஒரு உறுப்பில் குறைவந்தாலும் அது உடலைப் பாதிக்கும். நம்மிடம்காணப்படும்-தீமைகளை அகற்றவும், உயர்குணங்களை வளர்க்கவும், நமது நீதி நூல்களும், நெறிகாட்டிய சான்றோர் களதுவாழ்வும், சமயங்களும் உள்ளன. இவற்றின் துணையோடு நம்மை நாம் உருவாக்கிக் கொள்வது பெரிதும வேண்டத் தக்கது.

## பொங்கலிடுதலின் விளக்கம் :

வழக்கமாகவரும் பொங்கல் இப்போதும் வருகிறது. பொது வாக இது ஒரு நன்றியறிதலைப் புலப்படுத்தும் திருநாள். போகி யாகிய இந்திரன் மருதநிலத்தலைவன். மேகவாகனன். மழை உதவுவோன். அவனுக்கு முதல்நாள் நன்றி. சூரியன் இன்றெனின் பயிர்கள், அதன்வழி தான்யங்கள் இல்லை. எனவே, பொங்கல் திருநாளில் சூரியனுக்கு நன்றி. மனிதனுக்கு என்றும் உறுதுணையாயிருந்து உழைத்து தான்யங்களை நமக்காக்கி கழிவுப்பொருளாகிய வைக்கோலைத் [தமக்காக்கி வாழும் ஆன் இனங்கட்கு நன்றிபாராட்டுவோம். இதுவே மாட்டுப்பொங்கல். கன்னிப்பொங்கல் என்றும், காணும்பொங்கல் என்றும், கன்றுப் பொங்கல் என்றும் பேசப்பெறும். கரிநாள் கன்னியரும், காளையரும், தந்தையரும், தாயரும் மகிழ்வுடன் தெய்வ வழிபாடு செய்து நன்றிபாராட்டும் திருநாள்.

போகிப்பண்டிகை பழையன கழித்துப் புதியன கொள்ளும் நாள் என்றும் கொள்ளலாம். இவ்வாண்டு நாம் நமது குறை தவிர்த்து நிறைகளை வளர்த்துக்கொள்ள இந்நாளைத் தொடக்க மாக்கிக்கொள்வோம். பொங்கல் உழைப்புத்திருநாள். பால் பொங்கலிட்டுமட்டும் உண்டு மகிழாது, சமூக ஈடேற்றத்திற்கான உண்மையான|- மனம் நிறைந்த உழைப்பினை உரியவாறு வழங்க உறுதிபூணும் நாளாக அதனை ஏற்போம். மாட்டுப் பொங்கல் - நன்றித்திருநாள். மஞ்சுவிரட்டோடு அதனை நிறைவிக்காது, மாதா, பிதா, குரு, தெய்வம் என நம்மை உருவாக்கிய அனைவரிடமும் நன்றிபாராட்டும்பண்புக்கு அன்று விதையிடுவோம், கன்னிப்பொங்கல் - பெண்களுக்குரியது என்று ஒதுக்காது - பெண்மை அதன் கற்பு, இவற்றைப் போற்றும் ஒழுக்கம், மற்றும் உயர் பண்புகளை வளர்க்க இந்நாளில் உறுதிபூண்போம்.

உ
குருபாதம்
திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மயிலாடுதுறை – கீழையூர் ஹரிஜனக் காலனியில் 'விஸ்வஹிந்து பரிஷத்' ஏற்பாடு செய்திருந்த விழாவில்
வழங்கியருளிய

# ஆசியுரை

27—9—1981

" குலங்கொடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மகப்பாவை இடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையினானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே "

**சாம்பான் - சொல் விளக்கம் :**

சிவபெருமானைக் குறிக்கும் பல சொற்களில் ஒன்று 'சம்பு' என்பதாகும். 'சம்பு' என்றால் இன்பத்திற்கு ஊற்றுக்கண்ணாக விளங்குபவன் என்பது பொருள். உயிர்களுக்கு அவ்வின்பங்களை வற்றாது வழங்குபவன் என்பது கருத்தாகும். அவ்வகையில் 'சம்பு' எனும் இச்சொல் பின்பு 'சாம்பு' என்றாகி இச்சொல்லே பின்னும் திரிந்து 'சாம்பவன்' என்றாகி பின் 'சாம்பான்' என்று மாறி இருக்கலாம்எனத் தோன்றுகிறது. சாம்பவன் என்பதும் சிவபெருமானைக் குறிக்கும் சொல்லே. இதற்குப் பொருள் உமையுடன் கூடி இருப்பவன் என்பதாகும். சிவன் உமா மகேசனாயிருப்பதும், உயிர்கட்குப் போகம் அளிப்பதற்காகவேயாம். சம்பு-சாம்பவன் என்ற சொற்கள் வேறாயினும் பொருள் இன்பத்தை உயிர்கட்கு அளிப்பவன் என்பதில் மாறுபாடில்லை.

காந்தி அடிகளால் ஹரிஜனங்கள் என்றழைக்கப்பெற்ற ஆதிதிரா விடர்கள் பழங்காலத்தில் ஏன் இப்போதும் சில இடங்களில் தங்களைச் சாம்பவகுலத்தினர் என்று வழங்கிவந்தனர், வருகின்றனர். இச்சொல் வழக்கத்தினால், இவர்கள் சிவனைச்சார்ந்தவர்கள் எனும் கருத்து முற்காலத்தில் நிலவிவந்தது என்பது தெளிவாகும். இதற்கு ஏற்ப இம்மக்கள் பத்திரங்களில் தங்களின் பெயருக்குப் பின்னால் 'சாம்பான்' என்று எழுதிக் கொள்வதும் ஆதாரமாகும். எனவே இவர்கள் சிவனுடன் சம்பந்தமுடையவர்கள், அவர்தம் பிள்ளைகள் என்பதே வரலாற்று அடிப்படையில் காணப்பெறும் கருத்தாகும்.

## காந்தியின் கருணை!

இவர்கள் ஹரிஜனங்கள் என்று அழைக்கப்பெறும் நிலை காந்தி அடிகள் காலத்தில் தோன்றியதாகும். இந்தியா அடிமைப் பட்டுக்கிடந்த பொழுது இந்தியாவிலுள்ள மக்கள் அனைவரும் இந்தியத்தாயின் பிள்ளைகள் எனும் உணர்வைத் தோற்றுவிக்க விரும்பியவர். தேசப்பிதா என்றழைக்கப்பெறும் மகாத்மா காந்தி அடிகள் ஆவார். அப்பொழுது அவரின் மனத்தில் ஆதி திராவிடர்களின் தாழ்வுற்று வறுமையில் வாடிய நிலை மிகவும் வருத்தத்தை உண்டாக்கியது. அந்நிலையினை மாற்றி அவ் விந்தியர்களும் சமமாக மதிக்கப்பெறும் காலம் மலரவேண்டும் என்று கருதி இருதிட்டங்களைக் கொண்டுவந்தார். ஒன்று அவர்கள் விரும்பி வழிபடத் திருக்கோயில்களுக்குள் சுதந்திர மாகச்செல்லும் உரிமை பெறுதல். இரண்டாவது இந்தியாவி லுள்ள அனைத்துச்சாதியினரும் வயதுவந்தோர் ஓட்டுப்போடும் உரிமை பெறுதல். இவ்விரண்டு திட்டங்களினால் சமய அடிப் படையிலும். அரசியல் நிலையிலும் உரிமைகள் பெற்று அம் மக்கள் சமமாக வாழ்வார்கள் என்று அத்தலைவர் விரும்பினார். மேலும் அவர், தாம் விரும்பி வணங்கும் கடவுளாகிய ஹரியின் பிள்ளைகள் அவர்கள் என்று கூறி 'ஹரிசன்' என்றழைக்க ஆரம் பித்தார். அது முதல்தான் ஆதித்திராவிடர்கள் அரிஜன் என்று அழைக்கப்பெற்றனர்.

இங்ஙனம் சமுதாயநிலையில் தாழ்ந்திருந்த இவர்களை எப்படியும் மேலே கொண்டுவரவேண்டும் என்று எண்ணி அதற்காக உரிய வகையில் திட்டமிட்டுப் பாடுபட்டவர் இந்து மதத்தைச் சார்ந்தவர் என்பதனை இம்மக்கள் மறந்துவிடக் கூடாது. மகாத்மாகாந்தி அடிகள் தீட்டிய திட்டங்களின் அடிப் படையில்தான் இம்மக்களும் இன்று பல்வகையில் முன்னேறி வந்துள்ளனர் என்பதை இம்மக்களே உணர்வார்கள்.

## அன்றும் இன்றும் !

சுதந்திரம் பெறுவதற்கு முன்பு ஆதிதிராவிடர்களாகிய இவர்கள் எங்ஙனம் இருந்தனர் என்பதும், இன்று நாற்பது ஆண்டுகளில் எவ்வளவு முன்னேற்றம் பெற்றுள்ளனர் என்பதும், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்களுக்குத் தான் தெரியும். இன்று ஹரிஜன ஆடவர்கள் வேட்டி, சட்டை மற்றும் நாகரிக உடைகள் அணிந்து எல்லோருடனும் சமமாகப் பழகி வருகின்றனர், அதேபோல் பெண்களும் மற்ற இந்து மக்களைப்போலவே ஆடைகளை அணிந்து மற்ற மக்களுடன் வேறுபாடு இன்றி வாழ்ந்து வருகின்றனர். நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆடவர்கள் இடுப்பில் ஒரு கோவணமும் தலையில் முண்டாசும் அணிந்திருப்பார்கள். திருக்கோயில்களில் நுழையக்கூட அவர்களுக்கு உரிமை இல்லாதிருந்தது. உணவு நிலையும் மிகமிகத் தாழ்ந்தநிலையிலேயே இருந்துவந்தது. ஆனால் இப்பொழுது அவை எல்லாம் மாறிப் பலமடங்கு எல்லா நிலையிலும் இவர்கள் வளர்ச்சி பெற்றிருக்கின்றார்கள்.

மற்றைய இந்துக்களும் இவர்களைப்பார்த்து அன்புடன் பழகிச் சகோதர பாசத்துடன் அரவணைத்து வாழ்ந்துவருகின்றனர். ஒருசிலர்தான் ஒருசிலருடன் பிணக்குக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அப்பிணக்கும் குறிப்பாகப்பிற்படுத்தப் பட்டோரில் சிலரும் தாழ்த்தப்பட்டோரில் சிலரும்தான் கொள்கின்றனரே தவிர முற்படுத்தப்பட்டோருடன் இவர்களுக்குப் பிணக்கு ஏற்பட்டதாக இந்தநாற்பது ஆண்டுகளில் வரலாறே இல்லை. எனவே இந்நிலையினை நன்கு சிந்தித்து இவ் விருதிறத் தாரும் தேசியப் பற்றுடன் எல்லோரையும் இந்தியர்கள் என்று கருதி ஒற்றுமையுடன் வாழ்ந்து வருதல் மிகவும் அவசியமாகும்.

## யார் பகைவர்கள் ?

இவர்கள் இன்னொன்றையும் சிந்தித்தல் நலம் பயக்கும். இந்த ஆதித்திராவிட இனத்தில் பிறந்து, அதனால் பல்வேறு நன்மைகளை அரசிடமிருந்தும் பிறரிடமிருந்தும்பெற்றுக் கல்விக் கூடங்களிலும் பிறபிற இடங்களிலும் முன்னேறி நல்லபதவிக்கு வந்தவர்கள் தாம் வளர்ந்து வந்த நிலையினை மறந்து தம் இனத்தைச் சார்ந்தவர்களை முன்னேற்றவோ அவர்களுக்கு வேண்டும் உதவிகளைச் செய்யவோ முன்வராமல் தம்பதவிக்கு ஏற்ப உயர்ந்த ஜாதியினருடன் பழக ஆரம்பித்து அங்ஙனமே வாழ்வது இன்று இவர்களில் பல்லோரிடமும் காணமுடிகின்றது.

எனவே இவர்களுக்கு முதல் பகைவர்களாக விளங்குபவர்கள் இவர்கள் இனத்தில்பிறந்து பெரும்பதவி வகிப்பவர்களேஎன்று கூறினல் அதுமிகையாகாது. இவர்கள் இதனைச் சிந்திக்காமல் பிறபிறசாதியினர் தங்களுக்குப்பெரும்துன்பம் இழைக்கின்றனர் என்று கருதுவது சரியாகாது. ஒருசாதியில் பிறந்தவர்களே தாம் உயர்ந்த அளவிற்கு அச்சாதியினரைப் பின்னர் உயர்த்தினர் என்பதற்கு உதாரணம் காண்பது பொருத்தமாக இருக்கும்.

**ஓர் உதாரணம் :**

இன்று மிகச்சிறப்பான நிலையில் வாழ்ந்துவரும் நாடார் சமூகத்தினர் இருநூறு ஆண்டுகட்கு முன்பு மிகவும் தாழ்ந்த நிலையிலேயே இருந்தனர். இவர்கள் தங்கள் நிலையினை நன்கு உணர்ந்து பிறசாதியினரை குறை கூருமல் தங்கள் சாதியினருக்குள்யாராலும் தகர்க்கமுடியாதஒற்றுமையைக்கொண்டு, இடையருத உழைப்பும், அயராத ஊக்கமும், உலையாத முயற்சியும் கொண்டு வாழ்ந்து வந்தமையால் இன்றுள்ள உயரியநிலையினைப் பெற்றனர். சுற்றம்தழால் என்ற நிலையில் தங்கள் இனத்தாரைத் தழுவிவாழ்ந்தனர். வசதி படைத்தவர்கள் வழி இல்லாதவர்களைக் கண்டு வேண்டும் உதவிகளைச்செய்து அவர்களையும் உயர்த்தினர். இது நாடறிந்த உண்மை. இக் கருத்தினை இவர்கள் ஓர் உதாரணமாகக்கொண்டு வாழத்தலைப் பட்டால் இவர்கள் உறுதியாக முன்னேறலாம். ஒருவருக் கொருவர் பாசத்துடனும், நேசத்துடனும் உதவி உயர்வதற்கே சாதிகள் ஏற்பட்டன, ஆனுல் அது இப்போது முரண்பாடாக மாறிவருகிறது.

**வேறு பலரும் உள்ளனர் :**

தாழ்த்தப்பட்டோர்கள் இன்று பல வகைகளில் உள்ளனர். அவர்கள் குறவர்கள், தோல்தைக்கும் பணியாளர்கள், (சக்கிலியர்) நகரசுத்தி தொழிலாளர்கள் (தோட்டி) போன்ற வர்கள். அவர்களையும் சிந்தித்தல் அவசியமாகும். அவர்களும் இவர்களைப் போலவே இன்று முன்னேறவேண்டிய நிலையில் உள்ளவர்களே. இந்த சுதந்திரப் பெருநாட்டில் எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்பதில் யாருக்கும் இருவேறு கருத்தில்லை. இந்திய சட்டமும் எல்லோரும் எல்லாப் பதவி களும் பெறவாய்ப்பு அளித்திருக்கிறது. ஆனுல் அந்நிலையினைப் படிப்படியாகப் பெற இயலுமே தவிர ஒரே அடியாக ஒரே நாளில் அடைவது என்பது சாத்தியமில்லை. இவர்கள் இன்று

உள்ள பல்வேறு அரசு சலுகைகளைப்பெற்று முன்னேறிய அள வுக்குக்கூட மற்றவர்கள் முன்னேறவில்லை ஆனால் அவர்கள் யாரும், "நாங்கள், பிறமதத்தைச் சாரப்போகின்றோம்" என்று பயமுறுத்துவதில்லை. அவர்கள் அளவுக்கு அவர்கள் வளர்ந்து கொண்டுதானிருக்கின்றார்கள்.

## நன்றி கொன்ற செயல் !

இந்நிலை இப்படி இருக்க, இவர்கள் இந்து ராஜ்ஜியத்தின் சலுகைகளைத் தாராளமாகப் பெற்றுக்கொண்டு இந்த அரசின் மீதும் இந்த நாட்டின் மீதும் இந்து மக்களின் மீதும் வெறுப்புக் கொண்டு பிறமதம் சாருவது என்பதோ, சாரப்போகின்றேன் என்று பகிரங்கமாக அச்சுறுத்தல் நிலையில் அறிக்கைதருவதோ உண்மையில்நன்றிகொன்றசெயலேஆகும். அப்படிமதம்மாறும் போது இந்து மதத்தினிடத்தில் குறைகண்டு அதனை விளக்க மாகக் கூறிவிட்டுச் செல்வார்களே ஆனால் அது பொருத்தமாக இருக்கும். அதனைவிட்டு அந்த வசதி கிடைக்கும்: இந்தப் பதவி கிடைக்கும் என்று நம்பிப் போவதும் அங்குச் சென்றால் இந்த தாழ்ந்த சாதிக்கொடுமை இருக்காது என்று எண்ணிப் போவதும் நன்மைதராது என்பதனை அவர்கள் அங்கேபோன பிறகு தான் உணர்வார்கள். எந்தச் சமயத்திலும் எந்த இனத் திலும் தாழ்ந்த சாதி உயர்ந்த சாதி என்ற பிரிவினைகள் இல்லாம லில்லை. எனவே, இவர்கள் தங்கள் நிலையில், கிடைக்கும் வாய்ப்பினையும் சலுகைகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு ஒற்றுமையாகவும் நன்முறையிலும் உழைப்பார்களே ஆனால் இந்த வேறுபாடும், இப்பொழுது இருப்பதாகக் கருதும் தாழ்ந்தநிலையும், எளிதில் நீங்கிவிடும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை

## நாடு நலம் பெற :

எனவே இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து தங்கள் வாழ்க்கை மேன்மை பெறவும், தங்கள் சமுகம் முன்னேறவும், தாங்கள் வாழும் நாடு நலம்பெறவும் இவர்கள் இம்மதமாற்றப் பிரச்சனையை இத்துடன் முடித்துக்கொள்வதும், மதம்மாறிச் சென்றவர்கள் மீண்டும் தாய்ச் சமயம் திரும்புவதும் அவசிய மாகும் ஏனெனில் இந்திய வரலாற்றில் குறிப்பாகத் தென் னிந்திய வரலாற்றில் பிறநாட்டுச் சமய ஊடுருவல் காரண மாகவும், அவர்களை நம்பி அவர்கள்பின்னே சென்றவர்களின் இழிசெயல் காரணமாகவும், இந்நாடு அடிமைப்பட்டது என் பதை யாரும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது.

ஆதலின் நாடு நன்முறையில் சுதந்திரத்துடன் இருந்தால் தான் நம் பிரச்சனைகளை உரிமையுடன் நம்மவர்களிடம் கேட்கலாம் எனும் உணர்விலாவது இதனைச் சிந்தித்து மனதை மாற்றிக் கொண்டு தாய்ச்சமயம் திரும்புவார்களாக! *

அங்ஙனம் அவர்கள் திரும்பிவரவும், இவர்கள் நாட்டுப் பற்றோடும் இனப்பற்றோடும் இருந்து ஒற்றுமைக்குக் குறைவு வராமல் வாழ்ந்துவரவும், இங்ஙனம் வாழ்ந்துவரும் அனைவரும் நலம்பல பெற்று நீடுசிறக்கவும், எல்லாம்வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

~~~~~~~~~~~

## * தாய் மதம் திரும்பினர்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் விஜயத்திற்குப் பின்னர் மாயூரம் கீழையூரில் ஹரிஜனக் காலனியில் முஸ்லீம் மதத்திற்குமாறிய இளைஞர்கள் பதின்மர் 7—10—81 சரசுவதி பூசையன்று ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி சந்நிதியில் சதசண்டிவேள்வி நிறைவில் தருமையாதீனம் வந்து தொண்டர் தீர்த்ததில் நீராடி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்னர்தங்கள் தாய்மதமாகிய இந்துமதத்திற்குத் திரும்பினர். ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம்அவர்கள்திருநீறளித்துப் புத்தாடைகள் வழங்கி, திருக்கோயில் வழிபாடு செய்வித்து ஆசி வழங்கி அருளினர்கள்.

— ஞானசம்பந்தம் - 10—10—81.

---

## சமயப் பொதுமை மலர...!

சமயப் பொதுமையும், சமய உணர்வும் மக்கள் மத்தியில் பரவவும், அவற்றின்வழி மக்கள் அனைவரும் வேறுபாடு நீங்கி ஒற்றுமையுடன் வாழவும் சமயம் சார்ந்தவர்கள் ஒன்றுபடுதல் இன்றியமையாததாகும்.

— 26-வது ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்கள்.
~~~~~~~~~~~

சிவமயம்

# தைமகளே வருக!

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., பி. எட்.,

மார்கழி ஈன்ற திருமகளே — வரும்
மாசிக் குழந்தைக்குத் தாயவளே!
சீர்திகழ் தையென வந்தவளே — எங்கள்
சிந்தை நிறைந்தனை வாழியவே!

காவிரி வற்றிய போதினிலும் — நிலம்
காய்ந்து வரண்டிடும் காலையிலும்
ஆவது ஆகட்டும் என்றுனையே — மிகும்
ஆவ லுடன்எதிர் பார்த்திருந்தோம்!

பண்டிகை கேளிக்கை என்பதெல்லாம்
— நெஞ்சில்
பாரம் இறங்கிய நேரத்திலே — மக்கள்
மீண்டும் வறுமையில் தேய்கையிலே — வந்தால்
மெச்சிப் புகழ்வரோ மாநிலத்தார்!

பண்டை மகிழ்ச்சிகள் நெஞ்சிலில்லை — தேனும்
பாலும் பெருகிடக் காணவில்லை!
அண்டை அயலார் உதவவில்லை — நீர்
ஆற்றில் வருகிற மார்க்கமில்லை!

வளங்கள் மங்கிய நேரத்திலும் – நாடி
வந்தாரைப் போற்றுதல் எம்வழக்கு!
உளங்கள் கூம்பிய காலையிலும் – உனை
உள்ளத்தில் வைத்துப் போற்றுகின்றோம்!

அடுத்த முறைநீ வருகையிலே – உனை
ஆர்வமுடன் வரவேற் பதெனில்
மடுத்த பல்வளங் கொண்டுவந்து – எமை
மணக்கும் நிறைவினில் தங்கவைப்பாய்!

ஆறு பெருகிடச் செய்திடுவாய் – மழை
ஆர்த்துப் பொழிந்திட அருள்புரிவாய்!
ஏரி குளங்கள் நிறைந்திடிலே – உனை
ஏத்திப் புகழ்ந்திட யாம்நினைவோம்!

ஆட்சியில் உள்ளார் செய்பிழையோ – இறை
ஆலயம் தன்னில் நிகழ்பிழையோ
மாட்சியில் மக்கள் பண்பிழப்போ – மழை
மண்ணிடைப் பொய்த்தது என்னசெய்
[வோம்!

நம்பிக்கை இன்னும் தளரவில்லை – பலர்
நல்ல உளங்களில் தீமையில்லை
எம்மை வருத்திட நீதியில்லை – பொங்கல்
இன்னமுதம் தந்து காத்திடுக!

கல்வி நலம்பெறத் தெய்வபலம் – வந்து
கருத்து நிறைந்திட வேண்டியுனை
அல்லும் பகலும் வணங்குகிறோம் – தை
ஆனவளே எம்மை ஆதரிப்பாய்!

# தையில் நீராடிய தவம்

புலவர். திரு. மு. வைத்தியநாதன்

## பாவைப்பாட்டு :

'பாவைப்பாட்டு' என்பது பழந்தமிழ் நூல்களில் காணப் படும் ஒருவகைப் பாட்டாகும். அப்பாடல், இளம் மகளிர் நீர்த் துறையில் பாவை அமைத்து நீராடி விளையாடுவது பொருளாகப் பாடப்பெறுவதாகும்,

ஓர் ஆண்டில் ஒரு திங்கள் முழுவதும் இந்தநீராடல் நிகழ்ச்சி நடந்துள்ளது. மக்கள்பெற்ற முதிர்ந்த பெண்கள் துணையுடன், இளம்பெண்கள் அதிகாலைப் போதில் நீர்த்துறையில் நீராடி யுள்ளனர். இந்நீராடல் நிகழ்ச்சி, தைத்திங்கள் முழுவதும் நிகழ்ந்தமையால், 'தைந்நீராடல்' என்ற பெயருடையதாயிற்று.

பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்த மக்கள், முழுத்திங்களைக் கொண்டு மாதங்களைக் கணக்கிட்டுள்ளனர். அதனுல், மாதத் தைத் 'திங்கள்' என்றே குறிக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. தமிழ் நூல்களில் யாண்டும் 'திங்கள்' என்ற சொல்லே காணப் படுதலால் இதனை அறியலாம். பிற்காலத்தில் இம்முறை மாறி யிருக்கிறது.

## தைந்நீராடல் :

நாம் வழங்கும் மார்கழி மாதம், மார்கழி முழுத்திங்களுடன் முடிவடையும். மறுநாள் தொடங்கித் தைமாதம் நிகழ்வுறும். தைமாதத்து முழுநிலவோடு அது முடிவுறும். பழங்காலத்தில் மார்கழி முழுமதிநாளில் ஆதிரை நாள் வந்து கூடுதலின், அந் நாள் தொடங்கி, இப்பாவை விளையாட்டாகிய நீராடல் நிகழ்ந் துள்ளது. தைத்திங்களில் சிறப்புற நிகழ்ந்தமையால், பண்டை யோர் இதைத், "தாயருகாக நின்று தவத் தைந்நீராடல்" என்றே குறித்துள்ளனர்.

மழைக்காலத்து இறுதியாகிய மார்கழியில் முழுத்திங்கள் நிலவு பொழியும் பின்நேரத்தில் தொடங்கிப் பனிநீர் இறங்கும்

விடியற்காலத்தில் நாள்தோறும் இந்நீராடல் நிகழ்ச்சி நிகழ்ந்துள்ளது. மார்கழி முழுநிலவுநாள் திருவாதிரை நாளாகும். அன்று தொடங்கும் நீராடல் ஒரு வேண்டுதல் போலவே நடந்துள்ளது.

மகளிர் வேண்டுதல் :

நீராடும் இளம் மகளிர், "தைந்நீரே, நிறந்தெளிந்து நீராடற்குத் தக்கவாறு ஒழுகும் நீ பிரியாத கணவரைப் பெற அருளுக; யாம்விரும்பும் கணவர் எல்லா நலன்களும் எய்துக; பிறப்புத்தோறும் இடையறாத நிலையில் யாம் கணவனும் மனைவியுமாக மக்கட்பேறும் சுற்றமும் பெற்று நிலைபெற அருளுக" என்று வேண்டியுள்ளனர். இதனாலும், "தையில் நீராடிய தவம்" என்று கலித்தொகையிலும், "நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும். தைஇத் தண்கயம்" என்று ஐங்குறுநூற்றில் வருவதாலும் இந் நீராட்டுத் 'தைந் நீராடல்' என்றே வழங்கி வந்திருப்பதை அறியலாம்.

கபிலர் விளக்கம் :

தைந்நீராடும் இளம்மகளிர் பலவாறு தம்மை அழகு செய்து கொள்வர். அவர்களுள் உருவும் திருவுமுடைய ஒருத்தி, நீர்த் துறைக்குச் செல்லுமுன், தன் தோழியர் வாழும் வீடுதோறும் செல்வாள்; வேண்டும் பொருள்களையும் கேட்டு வாங்கித் தொகுத்துக் கொள்வாள்; பின்னர் கூட்டமாக நீர்த்துறைக்குச் சென்று, தோழியர் மகிழ அவர்களுடன் நீராடுவாள். ஆண்டு வரும் இரவலர்களுக்கு, அவர்கள் மகிழ பரிசும் வழங்குவாள். நீர்த்துறை மணலில்தான் அமைத்த பாவையாகிய மகனுக்குப் பிறபெண் ஒருத்தியின் பாவையாகிய மகளை மணம் பேசித் திருமணம் செய்விப்பாள்; பின்னர் சிறுசோறு அடுவாள்; தோழியர் புடைசூழ விருந்தூட்டல் நடத்துவாள். இவ்வாறு நீராடல், பாவைமணம், பொருள் வழங்கல், விருந்தூட்டுதல் முதலிய செயல்களுடன் நடைபெறுவதே, கலித்தொகையில் கபிலர் விளக்கும் "தைந் நீராட்டுத் தவம்" ஆகும்.

நாடு செழிக்க :

தைந்நீராடலின் போது, இளம் மகளிர் வேண்டும் வேண்டுதல்களைத் திருவெம்பாவையில் மாணிக்கவாசகர், "உன் அடியார் தாள் பணிவோம்; ஆங்கு அவர்க்கே பாங்காவோம்; அன்னவரே எங்கணவராவார்; அவருகந்து சொன்னபரிசே

தொழும்பாய்ப் பணிசெய்வோம்'' என்றும், திருப்பாவையில் ஆண்டாள். "நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினுல், தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து நீங்காது செல்வம் நிறைந்து'' என்றும் விளக்கியுள்ளனர்.

மார்கழி நீராடல்:

மாணிக்கவாசகரும் ஆண்டாளும் வாழ்ந்த காலத்தில், ஞாயிற்றின் செலவை அடிப்படையாகக் கொண்டு மாதங்கள் கணக்கிடப்பட்டன. அதனுல்தான், "போற்றியாம் மார்கழி நீராடல்'' என்று மாணிக்கவாசகரும், மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னுளால், நீராடப் போதுவீர்'' என்று ஆண்டாளும் பாட வேண்டியவராயினர். தைந் நீராடல், மார்கழி நீராடலாக மாறியது. மார்கழிநீராடலுக்குப் புது ஒழுக்கமும் கற்பிக்கப் பட்டது.

வழிபாடு:

காலவெள்ளத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் நீராடல் நிகழ்ச்சி யிலும் ஏற்பட்டன. மார்கழிநீராடல் ஒரு நோன்பு என்று விளக்கப்பட்டது. அந்த நோன்பு நடைபெறுங் காலத்தில் கண்ணுக்கு மையெழுதல் கூடாது; கூந்தலில் மலர் சூட்டக் கூடாது; நெய் பால் உண்ணல் கூடாது என்று ஒழுக்கங்கள் விதிக்கப்பட்டன. நீர்த்துறையில் சைவமரபில் வந்த இளம் மகளிர் தாங்கள் இயற்றிய பாவைக்கு 'உமையம்மை' என்று பெயரிட்டதாகவும், திருமாலை வழிபடும் மகளிர் 'கௌரி' என்று பெயரிட்டு வழிபட்டதாகவும் நூல்கள் தெரிவிக்கின்றன.

பாவை விளக்கம்:

திருவெம்பாவையில் இளம் கன்னிப்பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பிக்கொண்டு, கூட்டமாக நீர்த்துறைக்குச் செல் கின்றனர். அங்குப் பாவைவடிவில் சிவபிரானை வழிபடுகின் றனர். பின்னர் முதுதாயர் துணையுடன், சிவபிரான் புகழ்பாடி நீராடி மகிழ்கின்றனர். நீராடல் முடிந்ததும், மழைபெய்ய வேண்டிப்பாடிப் பரவுகின்றனர். விண்ணுகிமண்ணுகி இத்தனை யும் வேருகிக் கண்ணாரமுதமுமாய் நின்ற இறைவன் கழல்பாடி ஆடுவோம் என்று அனைவரும் வேண்டிக்கொண்டு இல்லம் அடைகின்றனர் என்றும்,

திருப்பாவையில் மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளில், பெண்களை அழைத்துப் பாவை நோன்பின் பெருமைகளை விளக்கி, மழையை வாழ்த்தித், திருமால் வழிபாட்டின்பயன்கூறி, உறங்கும் பெண்களை அழைத்துப் பாடகம், தோள்வளை, செவிப்பூ முதலியன பெறுவது கூறி, நெய்யமுதுண்டு, எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோம் யாம், உனக்கே ஆட்செய்வோம்' என்றும் உறுதிகூறி நிறைவு செய்வதாக விளக்கப்பட்டுள்ளது.

வழிப்படுத்துதல் :

திருவெம்பாவை திருப்பாவை ஆகிய இருநூல்களும் இந் நீராடல் நிகழ்ச்சியை, உறங்கிஎழுந்துவருவோரை, ஆண்டவன் புகழ் கேட்க விரும்பும் நன்மக்களாகவும், நீர்த்துறையை இறைவன் அருள் நிலையமாகவும், நீர்நிலையில் தோய்ந்து ஆடுவது, இறையின்பத்தில் தோய்ந்து இன்புறும் பேருகவும் விளக்கி, நம்மை இறையீடுபாட்டு நெறியில் செல்ல வழிப் படுத்துகின்றன.

---

**கடிதம்:**

* மலர் 42 இதழ் 1 என்னும் "ஞானசம்பந்தம்" அரிய கட்டுரைகளைத் தாங்கிவந்துளது. சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகத் திரு. வி. சா. குருசாமிதேசிகர் அவர்கள் அந்த அந்தத் தலம் பற்றிய வரலாறுகளை எழுதிவருவது மிகப்பொருத்தமாகவும் அருமையாகவும் உள்ளன. அபிராமி அந்தாதி உரையும் மிகப் பொருத்தமாக உள்ளன. சிறப்பாக ஈசர் பாதத்து நேரிழையே என்பதை ஸ்ரீ சுந்தரர் வரலாற்றோடு இயைத்துக் காட்டியுள்ளது மிக அருமையாக உள்ளது. நேற்று "ஆனந்தபரவசர்" குருபூசை விழா நிகழ்ச்சி கிடைக்கப்பெற்றேன். அடிகளாசிரியர் கல்வெட்டுக்களுக்குக் கொடுக்கும் விளக்கம் மிகநன்றாக உள்ளன.

அடியேன்,

5—1—1983. க. வச்சிரவேல் முதலியார்.

# திருஅகத்தியான்பள்ளி,
# திருக்கோடிக்குழகர் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,
**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,**

இத்தலங்கள், தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி தாலூகாவில் கீழைக்கடற்கரையில் வேதாரண்யத்துக்கு அருகில் உள்ளன.

மயிலாடுதுறை – காரைக்குடி புகைவண்டி வழியில் திருத்துறைப்பூண்டி – கோடியக்கரைக் கிளைப்பாதையில் வேதாரண்யத்தில் இறங்கி பேருந்தில் இவ்விருதலங்களையும் அடையலாம். திருமயிலாடுதுறை கும்பகோணம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, நாகைப்பட்டினம் ஆகிய நகரங்களிலிருந்து வேதாரண்யம் செல்லப் பேருந்துகள் பல உள்ளன.

## அகத்தியான்பள்ளி.

வேதாரண்யத்திற்குத்தெற்கே கோடியக்கரைக்குச்செல்லும் பேருந்துவழியில் 1½ கி. மீ. தூரத்திலுள்ளது. சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 126 ஆவது தலம்.

**தலச் சிறப்பு :**

திருஞானசம்பந்த சுவாமிகளின் திருப்பதிகம் பெற்றது. சிவபெருமானுடைய மணவாளத் திருக்கோலத்தைக் காண அகத்தியர்தவஞ்செய்த சிறப்புடையது. இங்கு அகத்தியருக்குத் தனிக்கோயில் உள்ளது. இங்கு விளங்கும் அகத்தியர் திருவுருவம் மிக்க பழமையும் பெருமையும் அழகும் உடையது. 1930–ம் ஆண்டு உப்பு சத்தியாக்கிரகம் நடந்த வரலாற்றுத் தொடர்புடையது இத்தலம்.

**கோயிலமைப்பு :**

கிழக்குநோக்கிய திருக்கோயில். திருக்கோயிலுக்கு எதிரே அக்னிபுஷ்கரிணி தீர்த்தம் உள்ளது. தேவகோட்டை பழ. சோம. சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் திருப்பணிகள்

செய்யப்பெற்றது. சுவாமி கிழக்குநோக்கியும் அம்பாள் தெற்கு நோக்கியும் விளங்குகின்றனர். அம்பாள் திருக்கோயிலுக்கு எதிரே சுவாமியைநோக்கிய நிலையில் அகத்தியர் திருக்கோயில் உள்ளது.

## பதிகச் சிறப்பு :

அகத்தியான்பள்ளியைத் தொழுவார் பாவம் வினைதுயர் ஆகியனமாயும் என்று அருளிச்செய்கிறார் திருஞானசம்பந்தர். காலனை உதைத்தது, காமனை எரித்தது, முப்புரம் செற்றது, தக்கன் வேள்வியைத் தகர்த்தது முதலிய இறைவனது வீரச் செயல்கள் குறிக்கப்படுகின்றன. இடுகாட்டில் நடனமாடிய செயலும் திருமால் பிரமர் அறியாதவாறு அழலுருவாய் ஓங்கி நின்றதும் கூறப்படுகின்றன.

## மூர்த்திகள் :

சுவாமி திருப்பெயர் அருள்மிகு அகத்தீசுவரர். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு பாகம்பிரியாள்நாயகி. மங்கைநாயகி எனவும் வழங்குவர். அகத்தியர் தரிசிக்கத்தக்கவர். தீர்த்தம்:- அகத்திய தீர்த்தம். கோயிலுக்கு மேற்புறத்திலுள்ளது. அக்னி தீர்த்தம், சுவாமிசந்நிதிக்கு எதிரே 2. கி. மீ. தூரத்தில் விளங்கும் சமுத்திரதீர்த்தம். அக்னிபுஷ்கரினி, சுவாமிசந்தியில் விளங்கும் திருக்குளம். எமதரும தீர்த்தம் அக்னிபுஷ்கரிணிக்கு வடக்கே உள்ளது. தலமரம் - வன்னி.

## அகத்தியர் :

" சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதும் திகழ்தரற் பொருட்டே."

என்பது தொல்காப்பியச் சொல்லதிகார உரையில் காணப்படும் அகத்தியர் துதியாகும். சிவபெருமான், அகத்தியர்வாயிலாகத் தென்னாட்டிற்குத் தமிழ் மொழியையும் பாணினிவாயிலாக வட நாட்டிற்கு வடமொழியையும் தந்தருளினான் என்பது இலக்கியங்கள் பலவற்றிலும் கூறப்படும் செய்தியாகும்.

" வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாகத்
தொடர்புடைய தமிழ்மொழியைத் தொல்லுகம் புகழ்ந்தேத்த
குடமுனிக்கு வகுத்தளித்தார் கொல்லேற்றுப்பாகர். "

என்பது திருவிளையாடற்புராணம்.

"தழற்புரை நிழற்கடவுள் தந்ததமிழ் தந்தான்" என்பது கம்பராமாயணம். தமிழ்த்தாயை, அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு என்பர் புலவர்.

அகத்தியரிடம் பயின்ற மாணவர்கள் தொல்காப்பியர் அதங்கோட்டாசான் பனம்பாரர் முதலிய பன்னிருவர் ஆவர். அகத்தியர் அகத்தியம் என்ற பெயரில் முத்தமிழுக்கும் இலக்கணம் இயற்றினர் எனக் கூறுவர். பாண்டியமன்னர்களின் குருவாகத் தென்பொதிகையில் வாழ்ந்தவர் இம்முனிவர். திருக்கயிலையிலிருந்து அகத்தியரைச் சிவபெருமான் தென்பொதியத்திற்கு அனுப்பிவைத்த வரலாற்றைக் கந்தபுராணம் கூறுகிறது. அகத்தியர் வேதகாலம், பாரதகாலம் இராமாயணகாலம், ஆகியவற்றிலும் குறிப்பிடப்படுகிறர்.

## அகத்தியர் பூசித்தது :

திருக்கயிலாயத்தில் உமையம்மையைப்பிரிந்து யோகநிலையில் இருந்த சிவபெருமான் தேவர்களின்துயர்துடைக்க முருகப்பெருமானைத்தரற்பொருட்டு இமவான் மகளாகப் பிறந்து தவம் இயற்றிய உமையம்மையைத் திருமணங்கொள்ள இமயமலைக்குத் தேவர்கள் முனிவர்கள் புடைசூழ எழுந்தருளினர். இறைவன் பார்வதி தேவியைத் திருமணங்கொள்ளும் இனிய விழாவைக்காண எல்லாப் புவனங்களிலுள்ளவர்களும் கூடினமையால் இமயமலை நடுங்கியது. பூமியின் வடபகுதி தாழ்ந்து தென்பகுதி உயர்ந்தது. இறைவன் பூமியைச் சமன்செய்யவும், செருக்குற்ற விந்தமலையை அடக்கவும் விரும்பி திருநந்திதேவர் மூலம் அகத்தியரை அழைப்பித்தார். அகத்தியரும் வந்து வணங்கி நின்றர். இறைவன் அகத்தியரை நோக்கி வடதிசை தாழ்ந்தும் தென்திசை உயர்ந்தும் நிலவுலகம் பிறழ்ந்துள்ளதால் உயிர்கள் அஞ்சுகின்றன. இதனைச் சமன் செய்தற் பொருட்டுப் பொதியமலையிற்சென்று தங்குக, எனப்பணித்தார். இறைவனது திருமணக்கோலத்தைக்காண இயலாமற் செல்ல நேர்கிறதே என அகத்தியர்வருந்தியபோது சிவபெருமான் 'தென்னுடுவந்து நமது திருமணக்கோலத்தை உமக்குக்காட்டியருளுவோம்' எனத் தேற்றி அனுப்பினர். அகத்தியரும் இறைவனிடம் விடை பெற்று விந்தமலையின் செருக்கினை அடக்கிப் பல தலங்களையும் வழிபட்டுக் கொண்டு திருமறைக்காடு வந்தார். இறைவன் அவருக்கு வேதாரண்யத்தில் தமது திருமணக்கோலத்தைக் காட்டி அருள் புரிந்தார். அகத்தியான்பள்ளியில் தங்கி இறைவனைப் பூசித்தார்.

எமதருமன் வழிபட்டுச் சீவன் பெற்ற வரலாறு இத்தலத்திற்குள்ளது. எமதருமன் உண்டாக்கிய தீர்த்தம் அவன் பெயரால் விளங்குகிறது. இத்தலத்தை வழிபட்டாலும், நினைத்தாலும் தீவினை நீங்கும் எனக் கூறப்படுகிறது.

**கல்வெட்டு :**

இத்திருக்கோயிலில் சோழமன்னரில் திரிபுவனசக்கரவர்த்தி இராசராசதேவரது இரண்டாம் ஆட்சியாண்டில் (29—1—1218) பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்றும், பிற்காலப் பாண்டியர்களில் (Later Pandiyas) மாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி குலசேகரதேவரின் ஐந்து, முப்பத்தொன்று இவ்வாட்சி யாண்டுகளில் பொறிக்கப்பெற்ற இரண்டு கல்வெட்டுக்களும், மாறவர்மன், திரிபுவனசக்கிரவர்த்தி வீரபாண்டிய தேவரின் பதினைந்தாம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்றும் ஆகநான்கு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகள் நுந்தா விளக்குகளுக்கும் நித்திய வழிபாட்டிற்கும் நிலங்கள் அளிக்கப்பெற்ற செய்திகளைக் குறிப்பிடுகின்றன. இராசராசன் ஒரு விளக்கிற்காக 1500 காசுகளும், மாறவர்மன் குலசேகரன் ஐந்தாமாண்டில் பொன் தானமும், முப்பத்தொன்றுமாண்டில் விழா நடத்த நிலதானமும் அளித்தனன்.

## கோடிக்குழகர்கோயில் (குழகர்கோயில்)

குழகர்கோயில் என வழங்கும் இத்தலம் கோடியக்கரை புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே 2. கி. மீ. தூரத்திலும் வேதாரண்யத்திலிருந்து தெற்கே 12. கி. மீ. தூரத்திலும் கோடிக்கரைக் காட்டுப்பகுதியில் உள்ளது. வேதாரண்யத்திலிருந்து பேருந்தில் வருவோர் கோயிலுக்கு அருகில் இறங்கலாம். சிறிய ஊர். திருக்கோயிலைச்சூழ வீடுகள் உள்ளன. இவ்வூருக்குத் தெற்கே $1\frac{1}{2}$ கி. மீ. தூரத்தில் கோடிக்கரை தீர்த்தமும் (கடல்) உருத்திரகோடி தீர்த்தமும் உள்ளன. சோழநாட்டுக் காவிரித் தலங்களில் இறுதியாக எண்ணப்படும் 127 ஆவது தலம்.

**தலச்சிறப்பு :**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பதிகம் பெற்றது. வாயுதேவன் அமுதகலசத்தைத் தேவர் உலகிற்கு எடுத்துச் செல்லும்போது அமுதம் சிதறிக் கீழேவிழ அது சிவலிங்கமாயிற்று என்பது இத்தலத்தின் சிறப்புக்குரிய வரலாறு. அதற்கு ஏற்றமுறையில் சுவாமிபெயர் அமுதகடேசுவரர் என வழங்குகிறது. இத்தலத்தில் விளங்கும் முருகப்பெருமான் தனிச்சிறப்புடைய மூர்த்தியாவார். ஒருமுகமும் ஆறு திருக்கரங்களும் உடையவராய் ஒருகரத்தில் அமுதகலசத்தை ஏந்தித் திகழும்

இம்மூர்த்தியைப்போலப் பிறதலங்களில் காணுதல் அரிதாகும். இத்தலத்தின் சிறப்புத் தெய்வமாக இவர் போற்றப்பெறுகிறார். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தெய்வம் இவர். இப்பெருமானுக்கு வைகாசி விசாகப்பெருவிழா சிறப்புற நடைபெறுகிறது.

## பதிகச் சிறப்பு :

சுந்தரர் இத்தலப்பெருமானை விளித்துப்பாடிய திருப்பதிகம் அருமையும் பெருமையும் உடையது. கோடிக்கரைக்காட்டில் துணையின்றியிருக்கும் பெருமானது தனிமைக்கு மனம் கவன்று சுந்தரர், 'கடிதாய்க் கடற்காற்று வந்து எற்றக் கரைமேல் குடிதான் அயலே இருந்தால் குற்றம் ஆமோ கோடிக்குழகீர் அடிகேள் உமக்கு ஆர்துணையாக இருந்தீர்' எனவும் 'ஏன்தான் தனியே இருந்தாய் எம்பெருமானே' எனவும்,

காடேல்மிக வாலிது காரிகை அஞ்சக்
கூடிப் பொந்தில் ஆந்தைகள் கூகை குழறல்
வேடித் தொண்டர் சாலவும் தீயர் சழக்கர்
கோடிக்குழ கா இடங் கோயில் கொண்டாயே

எனவும் கூறும் பாடல்கள் அவர் இறைவனோடுகொண்டிருந்த ஈடுபாட்டைப்புலப்படுத்தும். சுந்தரர் திருமுருகன்பூண்டி இறைவனையும் இவ்வாறே பாடுதல் ஒப்புநோக்கி உணர்தற்குரியது.

## கோயிலமைப்பு :

கோயில் அமைதியானசூழலில் கிழக்குநோக்கி அமைந்துள்ளது. அழகிய சிறிய திருக்கோயில். தேவகோட்டை சோமசுந்தரம் செட்டியார் திருப்பணி செய்துள்ளார். உள் பிராகாரத்தில் அமிர்தகணபதி, முருகன், கணபதிலிங்கம், சண்டேசுவரர் விளங்குகின்றனர். கோளிலித்தலம் ஆதலின் நவக்கிரகங்கள் வரிசையாக உள்ளன. சுவாமி கிழக்குநோக்கியும் அம்பாள் தெற்கு நோக்கியும் விளங்குகின்றனர். முன் மண்டபத்தில் காடுகிழாள் எனப்படும் அம்பிகை கோயில் உள்ளது. இவ்வம்பிகையைச் சுந்தரர்,

மையார்தடங் கண்ணிபங்கா கங்கை யாளும்
மெய்யாகத் திருந்தனள் வேறிடம் இல்லை,
கையார்வளைக் காடுகா ளோடும் உடனாய்க்
கொய்யார்பொழில் கோடியே கோயில்கொண் டாயே

எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வம்மையைச் சுந்தரர், கோடியின் மோடி எனத் திருநாவலூர்த் திருப்பதிகத்திலும் குறிப்பிடுகிறார். மகாமண்டபத்தில் குழகமுனிவர் திருவுருவம் உள்ளது.

**மூர்த்திகள் :**

சுவாமி பெயர் அருள்மிகு அமிர்தகடேசுவரர். குழகேசர் என்பன. அம்பாள் திருப்பெயர் அருள்மிகு மையார்தடங் கண்ணி. வடமொழியில் அஞ்சனுட்சிஎன்பர். முருகப்பெருமான் சிறப்பு மூர்த்தியாவார். ஒருமுகமும் ஆறுதிருக்கரம் கொண்டு விளங்குகின்ருர். ஒருக்கையில் அமுதகலசமும், ஏனையகைகளில் நீலோற்பலம், பதுமம் அபயம், வச்சிரம், வேல் ஆகியன உள்ளன. மயில் முகம் வடக்கு நோக்கியுள்ளது. அன்பர்கள் பலருக்கும் பிரார்த்தனைக்குரிய மூர்த்தியாக இப்பெருமான் திகழ்கிருர். இத்தலம் காட்டுப்பகுதியில் விளங்குதலால் காடுகிழாள் எனப்படும் அம்பிகை இக்கோயிலில் எழுந்தருளி யுள்ளார். தீர்த்தம்: கோயிலுக்கு எதிரே 1. கி. மீ. தூரத்தில் அக்னிதீர்த்தம் (கடல்) உள்ளது. கோயிலுக்குள் அமுதக் கிணறு எனப்படும் தீர்த்தம் உள்ளது. தலமரம் குரா.

**புராண வரலாறுகள் :**

தேவாசுரர்கள் திருப்பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய அமுதகலசத்தை வாயுதேவன் ஆகாய வீதிவழியே தேவருலகிற்கு எடுத்துச் செல்லுங்கால் அமுதம் இத்தலத்தில் சிதறிக் கீழே விழுந்து சிவலிங்க உருப்பெற்றது, என்பது இத்தலப் பெருமானின் தோற்றமும் பெயர்க்காரணமும் பற்றிய புராணவரலாருகும். வடநாட்டில் நர்மதை ஆற்றங்கரையில் சுவேதமுனிவருக்கும் சுசீலை அம்மையாருக்கும் மகனுகப்பிறந்த குழகமுனிவர் தன் நாடு வறுமைப்பட்டமையால் தலயாத்திரை யாக இங்குவந்து தங்கித் தவமியற்றிப் பேறுகள் பல பெற்ருர் எனக்கூறுகின்றனர். குழகமுனிவர் பூசித்ததால் இறைவன் குழகன் எனப்பெற்ருர். குழகமுனிவர்சிலை கோயிலில் உள்ளது. மற்றும் பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும் நாரதர் முதலிய முனிவர்களும் நவகோடி சித்தர்களும் இங்கு வழிபட்டு அருள் பெற்றுள்ளனர்.

**கோடி தீர்த்தம் :**

ஆதிசேது எனப்படும் கோடிக்கரைக்கடல் சிறந்த தீர்த்த மாகும். வியதீபாத யோகம், தக்ஷிணயண உத்தராயண புண்ணியகாலங்கள், மாதப்பிறப்பு அமாவாசை பௌர்ணிமை, விஷுபுண்ணிய காலம் இவைகளில் நீராடுவது சிறப்பு. கங்கையில் பத்தாண்டு ஆடிய புண்ணியம் கோடியில் ஒருநாள் ஆடக்கிடைக்கும். அர்த்தோதய மகோதய புண்யகாலங்களில் நீராடிப் பிதிர்க்காரியங்கள் தானங்கள் புரிவோர் பெரும்பயன் பெறுவர். கோடிக்கரைக்கடலில் நீராடுவோர் கோடிக்குழகர், திருஅகத்தியான்பள்ளி, வேதாரண்யம் தலங்களைத் தரிசித்தல் புண்ணியம். இங்குள்ள சித்தர்கட்டம் மிகச்சிறந்த இடம். சீவன் முத்தர்களான சித்தர்கள் இங்கு வாழ்வதாக நம்பிக்கை இருந்து வருகிறது. இங்கு பெருமான் அம்பிகைதிருவுருவங்கள் உள்ளன.

கடிதம்:

Prof. M. Visvanathan M. A.

Principal (Red)
A. V. C. College,
Mayiladuthurai 609 001.

"MURUGAN ILLAM"
88C, Fourth Avenue
Shanthi Colony,
Anna Nagar. Madras 40.
21—9—82

* "ஞானசம்பந்தம்" ஆவணித்திங்கள் இதழின் முதல் பக்கத்தைப் படித்துப் பெருமகிழ்ச்சியுற்றேன். நமது மடத்தில் சைவ சித்தாந்த ஆராய்ச்சி "மையம்" துவக்கியிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

இப்பணிக்குத் தாங்கள் நியமித்திருக்கும் இயக்குனரும் எல்லாத்தகுதியும் உடையவரென்று நம்புகிறேன்.

இந்த மையம் தமிழ் ஆராய்ச்சியாளருக்கும், பண்டிதர்களுக்குமட்டுமே ஊக்கம் கொடுப்பதோடல்லாமல், சாதாரணத் தமிழ் மக்களும் நம்மதத்தையும், சைவ சித்தாந்தத்தையும் எளிதில் புரிந்துகொள்ளும் அளவில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதும் மிக அவசியமென்று கருதுகிறேன்.

"சைவசித்தாந்தம் தான் உலகின் முதல்மதம். அதிலிருந்து தான் பிற மதங்கள் தோன்றின." – சிவாய சுப்பிரமணியசுவாமி (ஹவாய்). ஞானபூமி - 1—9—82.

இது இந்த சுவாமிகளின் புதிய கண்டுபிடிப்பல்லவென்பது தங்களுக்கு நன்கு தெரிந்ததே.

சைவ சமயம் கிருத்துவ, இஸ்லாமிய மதங்களுக்கும், ஏன்? வேதகாலத்துக்கும் முற்பட்டதென்று அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட, பேர் உண்மைதான்! ஆனால் இந்த உண்மைகளை எத்தனை தமிழர்கள் அறிந்துள்ளார்கள்.

பெரும்பான்மையான தமிழ் மக்கள் சைவசித்தாந்த மேன்மையை அறிவார்களா என்பது சந்தேகமே! (அப்படியிருந்தால் மீனாக்ஷிபுரத்தில் ஏராளமான மதமாற்றம் ஏற்பட்டிருக்குமா?)

கிருத்துவ இஸ்லாமிய மதபோதகர்கள் நீண்டகாலமாக பொய்ப் பிரசாரத்தாலும், பணபலத்தாலும் லட்சக்கணக்கான ஏழை இந்துக்களைத் தங்கள் மதத்திற்குள் இழுத்துக்கொண்டு விட்டார்கள். உலகத்திலுள்ள பல இஸ்லாமிய நாடுகளிலோ கிருத்துவ நாடுகளிலோ இதைப்போன்ற மதமாற்றம் லட்சக் கணக்கில் செய்யமுடியுமா என்று நாம் சிந்திக்கவேண்டும்,

நம்நாட்டில் இந்தநிலைமை இப்படியே நீடிக்குமானல் சிறிது காலத்தில் இந்தியாவிலேயே இந்து மதம் ஒரு சிறுபான்மையினரின் – Minority Community மதமாக மாறிவிடக்கூடும்.

தற்பொழுது ஏழை இந்து மக்கள் ஆன்மீகத்துறையிலும் ஆதரவற்ற அநாதைகளாகத்தான் இருந்துவருகிருர்கள்.

எழுபத்தைந்து ஆண்டுகளுக்குமேலாக சென்னையிலுள்ள சைவசித்தாந்த மகாசமாஜமும், நமது மாவட்டத்திலுள்ள சைவ மடங்களும் இத்துறையில் பணிபுரியவில்லை என்று சொல்லுவதற்கில்லை, ஆயினும் இப்பணிகளின் நற்பயன் போதுமான அளவில் இல்லை என்பதே என்வருத்தம்.

அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் போன்ற மற்ற இந்து சமயப் பிரிவுகளை நாட்டில் மக்கள் – ஓரளவாவது (பண்டிதர்கள் நீங்கலாக) தெரிந்திருப்பதைப்போல் சைவ சித்தாந்தத்தை அறியவில்லை என்பதுதான் என் கணிப்பு.

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து, மொழி தெரியாத ஒருநாட்டுக்குவந்து கிருத்துவமதபோதகர்கள் செய்யும் பணிக்கு நமது மதஸ்தாபனங்களின்பணி எந்தவிதத்தில் பின்தங்கிவிட்டென்பதை நாம் சிந்திக்கவேண்டும்.

உலகில் உள்ள சமயங்களில் ஒரு மாணிக்கமாய்த்திகழும் நமது சைவசித்தாந்தம், தற்சமயம் ஒரு குடத்திலிருக்கும் விளக்கைப்போல் உள்ளது. பொதுமக்களுக்கு இந்த விளக்கை வெளியில் எடுத்துவைத்து ஞான ஒளியை எல்லோருக்கும் – பண்டிதர்களுக்கும் – பாமரர்களுக்கும் வீசும்படிச்செய்ய வேண்டுமென்பதுதான் என் ஆசை.

ஆகவே தாங்கள் இப்பொழுது ஆரம்பித்துள்ள புனிதப் பணியானது ஆழமாகவும், விரிவாகவும், கவர்ச்சியாகவும் அமையவேண்டுமென்று நான் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்,

பட்டத்துக்குவந்ததுமுதல் தாங்கள் மடத்திலிருந்து செய்துவரும் நற்பணியை நான் நன்கு அறிவேன். தங்கள் பட்டத்தின் காலகட்டத்தில் இந்த புதிய முயற்சி ஒரு தலைசிறந்த பணியாக மலரவேண்டுமென்று மனப்பூர்வமாக நான் பெரிதும் விரும்புகிறேன்.

அன்பன்,

**M. விசுவநாதன்.**

# சிவநாமாவளி இசைப்பாடல்

திருமுறைக்கலாநிதி,

**வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.**

இராகம் - சங்கராபரணம் ] [ தாளம் - ஆதி. திஸ்ரநடை.

அட்ட மூர்த்தியைச் சரணடைந்தவர் தமக்கே
அச்சமென்ப தில்லை இச்சகத்தி லவர்க்கே (அ)

1 சுட்டதிரு நீறணியும் சுந்தர வடிவன்
துயர்துடைத்து உயர்வளித்துச் சுகந்தரும் இறைவன் (அ)

2 அயன்சிரம் ஒன்றைக் கண்டியூரில் அரிந்தவன்
அந்தகா சுரனைக் கோவலூரில் அழித்தவன் (அ)

3 திருவதிகைப் பதியில் திரிபுரம் எரித்தவன்
திருப்பறிய லூரில் தக்கன்சிரம் துணித்தவன் (அ)

4 விற்குடியில் சலந்தரனை வீழ்த்திய விமலன்
விரும்பும் வழுவூரில் வேழத்தை உரித்தவன் (அ)

5 குறுக்கைதனில் காமனைக் கோபித் தெரித்தவன்
கூற்றுவன் உயிரைத் திருக்கடவூரில் கொண்டவன் (அ)

6 அட்ட வீரட்டத் தலத்தமர்ந்த ஆதியான்
அபயம் என்றடைந்தவர்க்கு அருளும் சோதியான் (அ)

7 ஆரூரை மண்ணின் தலம் ஆக்கிக் கொண்டான்
ஆனைக்காவை புனலாக் கொண்டாளும் பிரான் (அ)

8 அண்ணு மலையில் அனலாய்த் திகழ்கின்றவன்
அப்பன் காளத்தியில் காற்ருகி அமர்பவன் (அ)

9 ஆகாச மெனத் தில்லையில் ஆடுகின்றவன்
அடியவர் நெஞ்சம் குடியாக்கொண் டாளுபவன் (அ)

10 அம்மையோடு ஐந்துபூதத் தலத்தில் உறைவான்
அஞ்செழுத்தை ஓதுவார்க்கு அஞ்சேல் என்பான் (அ)

11 பொங்கரவம் அணிமார்பன் புலித்தோ லுடையன்
பொன்ஞர் கொன்றைச் சடையன் புனிதன்விடையன் (அ)

12 இப்புவியில் அவன்புகழ் இயம்புதல் எளிதோ
என்றும் அவன் இணை யடிதொழ அருள்பெற லரிதோ (அ)

கட்டுரை எண். 34

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A,. D, U. N., I. U.

**இழைக்கும் வினைவழியே அடும்காலன் எனைநடுங்க**
**அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல்என்பாய்; அத்தர்**
**[சித்தமெல்லாம்**
**குழைக்கும் களபக்குவிமுலை யாமளைக் கோமளமே!**
**உழைக்கும் பொழுதுஉன்னையே அன்னையே என்பன்**
**[ஓடிவந்தே. 33**

### அ. அத்தர் சித்தமெல்லாம்.........கோமளமே

(1) "பிரபஞ்சத்தின் தந்தையாகிய சிவபெருமானின் திருவுள்ளத்தையே குழைத்து நெக்குருகச் செய்யும் நறுமணக் கலவை பூசிய குவிந்த திருமுலைகளையுடைய சியாமளாதேவி என்னும் மெல்லியல்பு மிக்கவளே!" என அழைக்கிறார்.

(2) "அவரது இசையினை இன்றெல்லாம்கேட்டுக்கொண்டிருக்கலாம்" என்று கூறினால் அந்த இசைவாணரின் இசையின் கவர்ச்சியும் அவ்விசை கேட்பவரின் நெஞ்சை நிறைவிக்கும் தன்மையும் தெளிவாகிறது. அவ்வாறே அன்னையின் திருமுலைகள் அத்தனின் சித்தத்தினைக் கவர்ந்து நிறைவினை அளிக்கின்றன. ஆகவே "சித்தம் எல்லாம்" என்றார்.

கணவனை மகிழ்வித்து நிறைவு செய்யவே களபம் என்னும் நறுமணக் கலவையினைப் பூசுவர். அன்னையும் அவனை மகிழ்விக்கக், களபக்குவிமுலையாள் ஆக விளங்குகிறாள்.

(3) சிங்கை நமச்சிவாயப் புலவர் தனது உலகம்மை கலித்துறை அந்தாதியில் உலகம்மையினை "சிக்கென்ற கொங்கை உலகே!" என அழைக்கிறார்.

(4) பரஞானம். அபரஞானம் ஆகிய இரண்டுமே அன்னையின் திருமுலைகள். ஆதலால் இங்கு அவ்விரண்டு ஞானங்களே இறைவனைக் குழைவிக்கின்றன என்பது உட்பொருள்.

(5) ஒரு கண்ணாடியின்வழியே ஆதவனின் கதிர்களை ஒருமுகமாகக் குவியச்செய்யும்பொழுது, அக்குவித்த ஒளி பஞ்சினைத் தீப்பற்றச்செய்யும் ஆற்றல் உடையதாகிறது. அவ்வாறே ஞானத்தினைப் பலவிடத்தில் சிதறவிடாது இறைவன்பால் ஒருமுகப்படுத்தினால் அவனது அருள் எளிதில் கிட்டுகிறது. பர அபர ஞானங்களை எய்தினோர் அவற்றினை இறைவன்பால் ஒருமுகப்படுத்தி அர்ப்பணிக்கவேண்டும். அப்படிச்செய்தால் அவன் சித்தமெல்லாம் குழைந்து அருள்பாலிக்கின்றான். 'குவிமுலை' குழைவிக்கின்றது என்றதன் உட்கருத்து இதுவே!

(6) "பாகன் அகங்குழைவித்த பவித்திர பயோதரி", என்ற தக்கயாகப்பரணி மேற்கோளினை திரு. கி. வா. ஜ. அவர்கள் இங்குச் சிறப்பாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். "புனிதத் திருமுலையாள்" எனப் பொருள்படும் "பவித்திர பயோதரி" என்னும் ஒட்டக்கூத்தர் வாக்கு இங்குச் சிந்தித்தற்குரியது. விரஸமான காமத்தினால் குழைவிப்பனவல்ல அன்னையின் திருமுலைகள். அவை பர அபர ஞானங்களே ஆதலால் "பவித்திர பயோத்ரம்" எனவும், இறைவனின் சித்தத்தினையே குழைவிப்பதால் "அகங்குழைவித்த பவித்திர பயோதரம்" எனவும் புகழ்கிறார் 'யாமளசாஸ்த்திர'மென்னும் தேவிவருணனையில் திறமைபடைத்த ஒட்டக்கூத்தர்.

(7) இறைவனின் அன்பினை அல்லது பிரேமையினை எவரும் எளிதில் விலைக்கு வாங்கிவிடமுடியாது. ஆனால் அம்பிகை அவனது அன்பினை இருமடங்கு விலைகொடுத்து வாங்கிவிடுகிறாளாம். காமேச்வரனது அன்பெனும் இரத்தினமணியினை தனது இரண்டு திருமுலைகளை ஈட்டுப்பொருளாகக் கொடுத்து வாங்குகிறாள். இப்படி வருணிக்கிறது சமஸ்ரநாமம். "காமேச்வர ப்ரேமரத்ன ப்ரதி பணஸ்தனி" என்பது அந்த நாமம்.

## ஆ. இழைக்கும் வினைவழியே அடும் காலன் எனைநடுங்க அழைக்கும் பொழுது.

(1) உயிர்களின் இருவினைகளுக்கேற்ப அவைகளை ஒறுத்து அழைக்கும் காலன் வரும்பொழுது அபயமளிக்கவேண்டுகிறார்.

(2) அவரவர் நாள்பார்த்தே வருபவன் ஆதலால் 'காலன்' எனப்பட்டான். அக்காலகட்டத்திற்கு உட்பட்டு உயிர்களை எடுத்துச்செல்லும் காலன் அவ்வுயிர்களை " எமதர்பாரின் "முன் நிறுத்தி சித்திரபுத்திரன் கணக்கினையும் அவர்களதுவாக்குமூலத்தையும் கேட்டறிந்து நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப முறையே தண்டனையும் மேலுலகும் அளிப்பான் எனப் புராணங்கள் கூறும். எனினும், அடியார்கள் அல்லாத ஏனைய மக்கள் அவனைத் தண்டிக்கும் தருமன் என்று பொதுவாக அஞ்சுவர். கொடிய துன்பத்தினை ' எமவேதனை ' என்றும் கூறுவர். எனவே ' அடும் காலன் ' என்ருர். அக்காலனின்வருகை நடுநடுங்கிக் கலங்கச்செய்யும். மிகவும் கோரமான தோற்றமுடைய தனது பரிவாரங்களுடன் தானும் அதே கோரவுருவுடன் காட்சியளிக்கும் காலன் என்றவுடன் எவரும் நடுங்குவதால் " நடுங்க அழைக்கும்பொழுது " என்ருர்.

(3) அவ்வவரது வினைப்பயன் அல்லது ஊழ்வினை எனப் படும் விதியே இறப்பு உள்ளிட்ட இன்னல்கள் அனைத்தினுக்கும் காரணமாகிறது. " இழைக்கின்ற விதி முன்செல்ல தருமம் பின் இரங்கியேக " என்ற கம்பராமாயண நகர் நீங்கு படலச் செய்யுள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

(4) மரணத்தின் முதல்நாள் இரவு பயங்கரமான கனவு களும், தீய அறிகுறிகளும் தோன்றும்; அடும்காலனின் அறி குறிகள் தோன்றும் அவ்வீரவிற்கு " காலராத்ரி " என்றுபெயர். அம்பிகையின் பரிவாரதேவதைகளில் ஒருவள் பெயரும் ' கால ராத்ரி ' என்பதாகும். பின்ஞெருபாடலில் அரிவையர் சூழவந்து " அஞ்சலென்பாய் " என அபிராமிபட்டர் கூறுவார் அங்கு ' அரிவையர் ' என்பது பரிவாரதேவதைகளைக்குறிக்கும். 'கால ராத்ரி' எனப் பெயர்பெற்றவள் உள்ளிட்ட அம்பிகையின் பரிவாரதேவதைகளை அன்றி, அடுங்காலனின் தூதுவர்கள் அடியவர்பால் வாரார். எனவே, இதுவும், நம்போன்ற எளிய மக்களின் எமபயம் நீங்க அபிராமிபட்டர் கூறுவதாகும்,

## இ. உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே ! என்பன். ஓடிவந்து அஞ்சல் என்பாய் !

(1) அவ்வாறு காலனின் கைப்பாசத்திற்பட்டு யான் கலங் கித்தவிக்கும்பொழுது அம்மா ! என்று உன்னைத்தான் அழைப் பேன். அப்போது நீ ஓடிவந்து ' அஞ்சற்க ' எனக் கூறிக் காத்தல்வேண்டும்.

(2) ஒருவன் கஷ்டகாலத்தில் உடனே உச்சரிக்கும் சொல் மாதா ! (அன்னையே) என்பதாகும். "ஸ்ரீமாதா!" என்ற முதல் நாமத்திற்கு பாஸ்கரராயர் உரையெழுதுமிடத்து இங்ஙனம் விளக்குகிறார். தாயினைத் துரத்திச்சென்று அடிக்கமுயலும் ஒருவனும் தான் வழியில் தடுமாறி விழுந்து அடிபட்டவுடன் "அம்மா !" என்றேதான் அழைக்கிறான். காலன்வரும் காலம் உள்ளிட்ட அனைத்துத் துன்பநேரங்களிலும் அழைப்பது அம்பிகையை அல்லது அவள்வடிவான தாயினையே ! எவரும் உதவிக்கு வரவியலாத அந்தக்காலத்தில்-துணையாகவிரும்பாத அந்தக்காலத்தில் அவள்மட்டும்தான்வருவாள் ! அதுவும் விரைவாக ஓடிவருவாள் ! வந்து "நானிருக்கபயமேன் ? " என்பாள் ஆகவே, "உன்னையே அன்னையே ! என்பன் " என்றார்.

(3) உழத்தல் என்றால் வருந்துதல் அல்லது துன்பப்படுதல் என்பது பொருள். "உழந்தும் உழவேதலை" என்பது திருக்குறள். இங்கு எதுகைநோக்கி "உழைக்கும் பொழுது" என்றார். காலனின்வருகை, அதுதரும் துன்பம் முதலியவற்றினை அபிராமி அந்தாதியில் நான்கைந்து இடங்களில் குறிப்பிடுகிறார். காலனைக் கடிந்தபிரான் ( காலசம்ஹாரமூர்த்தி ) எழுந்தருளியிருக்கும் கடவூர்வீரட்டானத்து அம்பிகையினைப்புகழும் நூலாதலின் அவ்வீரத்தினை ஆங்காங்கே நினைவுபடுத்துதல் கூறியது கூறல் ஆகாது.

(4) கந்தர் அலங்காரத்தில் :-

" படிக்கும் திருப்புகழ் போற்றுவன், கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய்; பெரும்
நடிக்கும் பிரான் மருகா ! கொடுஞ்சூ ரனடுங்க [பாம்பினின்று
இடிக்கும் கலாபத் தனிமயில் ஏறும் இராவுத்தனே "

என்ற பாடலிலும்,

" மாகத்தை முட்டிவரு நெடுங்கூற்றன் வந்தால் என்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற்பாய் ! சுத்த நித்தமுத்தித்
தியாகப் பொருப்பைத் திரிபுராந்தகனைத் திரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே ! "

என்ற பாடலிலும் அவ்வாறே அருணகிரியும் வேண்டுகின்றார். இங்கு, தியாகப்பொருப்பைத் திரிபுராந்தகனைத் திரியம்பகனைப் பாகத்தில் வைக்கும் பரமகல்யாணி என அன்னையினைப் புகழ்கிறார். பாகத்தில் வைத்தவன் இறைவன். ஆனால் அவள்

அவனைப் பாகத்தில் வைத்தாள் என்கிறார். தன் மக்களாகிய உயிர்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தான் இணைந்திருக்கும் நிலையில் எடுத்துக்கூறி இறைவனின் அருளையும் எளிதாக்கி விடுவாள். ஆதலால் அவளைப் புகழ்கின்றாள். அவ்வாறே அவள் களபக் குவிமுலையால் கணவன் குழைந்திருக்கும் நிலையில் இங்கும் பட்டர் அருள்வேண்டுதல் காண்கின்றோம்.

(5) "என்றைக்கும்நீ துணையம்மா! என் ஆவி இறந்துவிடும்
அன்றைக்கும் ஓடிவந்து அஞ்சல் என்பாய்"

என சிங்கை நமச்சிவாயப் புலவர் பாவநாசம் உலகம்மையினை வேண்டுகிறார். இங்கும் "ஓடிவந்து அஞ்சல் என்பாய்" என்ற அதே வேண்டுகோளையே காண்கிறோம்.

மரணவேதனை என்னும் இறுதிக்கால இன்னல் எய்தா திருத்தல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.


# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தற்காலமக்களின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஏற்றவகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் காட்டிய வழியில் மத உண்மைகளை இந்த மாதப் பத்திரிகை வெளியிட்டுவருகிறது.

## சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | ... | ரூ. | 12—00 |
| ஆயுள் சந்தா | ... | ரூ. | 150—00 |
| தனிப் பிரதி | ... | ரூ. | 1—20 |

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ மாதம் ரூ. 15—00 ஆகவோ ஒரு வருடத்திற்குள் செலுத்தலாம், வருட சந்தாதாரர்களை ஆயுள் சந்தாதாரர்களாகப் பதிவு செய்துகொள்வதன்மூலம் பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவி புரியக் கோருகிறோம். ஆயுள் சந்தா என்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பத்திரிகை அனுப்பப்படும் என்பதைக் குறிக்கின்றது.

விவரங்களுக்கு :
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்,
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
தொலைபேசி-71231. மயிலாப்பூர், சென்னை - 600 004.

# நாவலர் நாட்டார் ஐயாவின்

## நல்ல பெருவிளக்கம்

'சித்தாந்தப் புலவர்மணி

திரு. ந. ரா. முருகவேள், M. A., M.

**முன்னுரை :**

நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஐயா அவர்கள் (1884—1944), அண்மைக்காலத்தில் இருந்த தமிழ்ப் பெரும் சான்றோர்களில் தலைசிறந்த பெரும்புலவர் ஆவார். அவர்களைச் சைவத் தமிழுலகம் நன்கு அறியும். அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவிளையாடற்புராணம் முதலிய, பல பெருநூல்களுக்கு அரும்பெறல் உரைகள் வகுத்த அறிஞர் பெருந்தகை, திரு நாட்டார் ஐயா அவர்கள்! திருச்சி பிஷப்ஈபர் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய திரு. நாட்டார் ஐயா அவர்கள், தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த, கரந்தைப் புலவர் கல்லூரிக்கு மதிப்பியல் முதல்வராக (1941 — 1944) விளங்கியிருந்தார்.

**கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோ மன்றம் :**

கரந்தைப் புலவர் கல்லூரியில், "இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்" என்னும் அமைப்பு ஒன்று, புலவர் வகுப்பு மாணவர்களின் பொருட்டு நடைபெற்று வந்தது. அதன் ஆண்டுவிழா ஒன்றிற்கு நாவலர் நாட்டார் ஐயா அவர்கள் தலைமை தாங்கினார்கள். வித்துவான் திரு. சி. இலக்குவனார். அவ் ஆண்டுவிழாவில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார், அதுபோது திரு. சி. இலக்குவனார், திருவையாற்று அரசர்கல்லூரி யில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். ஆதலின் அவர் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும், கரந்தைப் புலவர்கல்லூரிக்கும் அவ்வப்போது வருவது உண்டு. அதனால் இளங்கோவடிகள் இலக்கிய மன்றத்தின் ஆண்டு விழாவில், நாவலர் திரு. நாட்டார் ஐயா அவர்கள் தலைமையில், "சங்க இலக்கியச் சிறப்பு" என்னும் பொருள்பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

## அறிஞர் இலக்குவனார் :

திரு. சி. இலக்குவனார் அவர்கள் நுண்மாண் நுழைபுலம் வாய்ந்தவர்; சீரிய கூரிய ஆராய்ச்சித்திறன் மிக்கவர்; சங்க இலக்கியங்களை நன்குகற்றுத்தேர்ந்தவர்; இலக்கண இலக்கியப் புலமைகள் அனைத்தும் நிரம்பியவர்! தொல்காப்பியக் கடலில் தோய்ந்து திளைத்து நீந்தி மகிழ்ந்தவர். பிறகு சில ஆண்டுகள் கழித்து, தொல்காப்பியம் பற்றி ஆங்கிலத்தில் ஆராய்ச்சி நூல் எழுதி 'டாக்டர்' பட்டம் பெற்றவர். மதுரைத் தியாகராசர் கல்லூரியிலும், ஆந்திரநாட்டு உசுமானியப் பல்கலைக் கழகத்திலும், தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர்.

இலக்கண இலக்கிய ஆராய்ச்சிகளில் புலமை பெற்றுத் திகழ்ந்த அறிஞர் திரு. சி. இலக்குவனார் அவர்கள், திரு. நாட்டார் ஐயா அவர்கள்பால், அளவற்ற அன்பும் மதிப்பும் ஈடுபாடும் கொண்டவர். அவ்வாறே திரு. நாட்டார் ஐயா அவர்களும், இளைஞராக இருந்த இலக்குவனார் அவர்கள்பால், மிகுந்த அன்பும் பரிவும் நன்மதிப்பும் கொண்டவர். இளங்கோ வடிகள் இலக்கிய மன்றத்தின் ஆண்டுவிழாவில், இவ்விரு பெருமக்களும் கலந்துகொண்டது, மிக்கசிறப்பும் பொருத்தமும் பெற்று விளங்கியது. விழாவிற்கு ஏராளமான தமிழ்ப் பெரு மக்களும், பொதுமக்களும்கூட, வந்திருந்து சிறப்பித்தனர்.

## சங்க இலக்கியச் சிறப்பு :

அறிஞர் திரு. இலக்குவனார் சங்க இலக்கியங்களின் சிறப்புக்களை விரிவாக விளக்கிச் சிறப்பாகப் பேசினர். அதுபோது, "இயற்கைப் பொருள்களை உற்றுநோக்கி ஆழ்ந்துணர்ந்து, அவற்றின் இயல்புகளை உள்ளவாறு எடுத்துப் பாடுதலில், சங்க காலப் புலவர்கள் ஒப்புயர்வற்று விளங்கினர்" என்னும் கருத்து அவரால் பெரிதும் வலியுறுத்தப்பெற்றது. அதன் தொடர்பாகப் பேசிக்கொண்டுவந்தபோது, 'பிற்காலப்புலவர்கள், சங்ககாலப் புலவர்களைப்போல, இயற்கைப் பொருள்களை ஊன்றிநோக்கி உணர்ந்து, உள்ளவாறு எடுத்து விளக்கிப் பாடும் திறம் பெற்றிலர்' என்று குறிப்பிட்டு, அப்போது புலவர் வகுப்பு மாணவர்களுக்குப் பாடமாக இருந்த, காஞ்சிப்புராணத்தில் ஒரு பாடலை எடுத்துச் சொல்லி, "அந்தப் பாடலில் வரும் மரங்களுள் ஒன்றற்குக் கொடுக்கப்பெற்றிருக்கும் அடைமொழி, அறவே பொருந்தாதது; கவிஞர் கொடுத்துள்ள அடைமொழி

அம்மரத்தின் இயற்கைத்தன்மைக்கு முற்றிலும் முரணனது"‡ என்றுகூறி, அப்பாடலைப் பாடிய கவிஞரை, ஒருசிறிது எள்ளற் குறிப்பு அமையச் சுட்டிக்காட்டி, தமது உரையினை நிகழ்த்தி முடித்தார்.

**தலைமை நிறைவுரை :**

அறிஞர் திரு. இலக்குவனர் அவர்கள், தமது சொற் பொழிவை நிறைவுசெய்தபின்னர், திரு. நாட்டார்ஐயா அவர்கள் தமது தலைமைமுடிவுரையைச் சுருக்கமாகவும் பொருத்தமாகவும் நிகழ்த்தினர். தமது முடிவுரையில், நாட்டார் ஐயா அவர்கள் திரு. இலக்குவனர் அவர்களின் ஆராய்ச்சித்திறன் மிக்க சொற் பொழிவைப் பெரிதும் புகழ்ந்து போற்றி மகிழ்ந்தார். எனினும், இடையில் ஒரு சிறு விளக்கத்தினையும் செய்தருளினர்.

"நமது சிறப்புச் சொற்பொழிவாளர், தம்முடைய கருத்தினை விளக்குவதற்குக் காஞ்சிப்புராணச் செய்யுள் ஒன்றனைத் திறம்பட எடுத்து மேற்கோள் காட்டினர். தமது கருத்தை வலியுறுத்துவதற்காகத் தகுந்த மேற்கோள் எடுத்துக்காட்டிய முறை, சொற்பொழிவாளரின் அரும்பெரும் புலமைத்திறனையும், சொல்வன்மையினையும் செவ்விதின் உணர்த்துகின்றது. எனி னும் காஞ்சிப்புராணம் பயிலும் புலவர் வகுப்பு மாணவர் களாகிய நீங்கள், அவர்மேற்கோள்காட்டிய அருமைப்பாட்டினை ஓர்ந்து உணராமல், காஞ்சிப் புராண ஆசிரியரையே ஏதேனும் எளிதாகத் தவருக எண்ணிவிடக்கூடாதே என்று கவன்று அஞ்சி, யான் ஒருசில சொற்களைச் சொல்லலாம் என்று விரும்பு கின்றேன்.

**சிவஞான சுவாமிகள் :**

"நமது தமிழ்கூறும் நல்லுலகத்தில், சைவ சமயப் பெருவா னத்தில் அண்மைக் காலத்தில் விளங்கியிருந்த மாபெரும் கவிஞர்களில் சிவப்பிரகாசர், குமரகுருபரர், சிவஞானசுவாமிகள் என்னும் மூவரும், ஒப்புயர்வற்ற ஞானப்பெருஞ் சுடர்மணிகள் ஆவர். சிவஞானசுவாமிகள் பல துறைகளில் வல்லவர். இலக்கணம், இலக்கியம், தருக்கம், கவிதை புனைதல், மதிப் புரை வரைதல், காவியங்கள் இயற்றுதல், பேருரைகள்வகுத்தல்

---

‡ ஒரு கவிஞன் பொருத்தமும் திருத்தமும் வாய்ந்த அடை மொழிகளைத் திறன் தெரிந்து தேர்ந்தெடுத்து வழங்குதலைக் கொண்டே, அக்கவிஞனின் திறமை அளந்தறியப்படும் (The choice adjectives is a fine test of a poet's talents) என்பர், மேலைநாட்டறிஞரும். — ந. ரா. மு.

ஆகிய பலதுறைகளிலும், தமக்கு ஒப்பாகும் மிக்காரும் இன்றித் தலைமைநிலை பெற்று விளங்கியவர்.

"தலபுராணங்கள் எத்துணையோ பலப்பல இருப்பினும் அவைகளுள் காஞ்சிப்புராணம் தணிகைபுராணம் முதலியன ஈடும் எடுப்பும் அற்றவை. தணிகைபுராணம் பாடிய கச்சியப்ப முனிவர், சிவஞான சுவாமிகளின் மாணவர்கள் பன்னிருவரில் ஒருவரே எனின், சுவாமிகளின் பெருமையினை யாவரும் இனிது எண்ணியுணரலாம். சங்கரர் இராமாநுசர் மத்துவர்முதலிய சமய தத்துவச் சான்றோர்கள், வடமொழியிற் பிரம்ம சூத்திரத்திற்குப் பேருரைகள் விரித்துள்ளனர். அவற்றைப்போல, அவற்றுக்குச் சமானமாக, நம் தமிழிலுள்ள சிவஞானபோதம் என்னும் சைவ சித்தாந்தத் தத்துவநூலுக்குப் பேருரை வகுத்தருளியவர், சிவஞானசுவாமிகள். அவர்தம் அருமைபெருமைகள் அளப்பரியன."

## காஞ்சிப் புராணம் :

"காஞ்சிப் புராணத்தில் பிற புராணநூல்களில் காணப்படாத பல புதியபுதிய நல்ல அமைப்புக்களைவகுத்து, சிவஞான சுவாமிகள் முதன்முதலாகவும், சிறப்பாகவும் அதனை இயற்றியருளியிருக்கின்றார். பெரியபுராணம் பாடிய சேக்கிழார்பெருமானைப் பின்பற்றி, ஐந்திணை நிலவளங்களையும், ஐந்திணை நில மயக்கங்களையும் பற்றி, நமது மாதவச் சிவஞானசுவாமிகள் பாடியிருக்கும் திறம், புலவர் பெருமக்களுக்கெல்லாம் மிகப் பெரிய அறிவு விருந்தாகும் ஐந்திணைகளை முறையே வரிசையாகப் பாடி வருங்கால், பாலைத் திணையின் இயல்பு குறித்துச் சுவாமிகள் பாடிய பாடல்களில் ஒன்றினையே, இங்கு நம் சொற்பொழிவாளர் எடுத்துக் காட்டினார். பாலைத் திணையைச் சுவாமிகள் எவ்வளவு அழகாக, எத்தகைய கற்பனை நலம் பொருந்துமாறு, பாடியிருக்கின்றார் என்று பாருங்கள்."

## பாலைத் திணை :

'பாலைத் திணைக்கு உரிய மரங்களுள் குராமரம், கோங்கமரம், பாடலமரம், மராமரம், முருங்கைமரம் என்பன சிறப்பாக உரியன. இவ்வுண்மையை உணர்ந்து கொள்ளுதலே, இந்நாளிற் பெரும்புலமையாகும். இம்மரங்கள் பாலைத் திணையில் இருக்கின்றன என்று, பொதுவாகக் குறிப்பிட்டாலே போதும். ஆனால் அதுகவிதையாகாது. ஆதலின், அவற்றையெல்லாம் இயைபுற இணைத்து, கற்பனை புனைந்து அழகுபடுத்தி, உயிர் கொடுத்து, நாம் என்றும் மறவா வகையில், நம் உள்ளத்திற் பதிந்து மகிழ்ச்சிவிளைவிக்கும்வண்ணம், நம்முடைய மனக்கண்ணின்முன்னர் அவற்றை உலவவிடுகிறார்சுவாமிகள்.' (தொடரும்)

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு அகத்தியான்பள்ளி அருள்மிகு அகத்தீசுவரர் ஆலயத்திலும், கோடிக்குழகர் (குழகர்கோயில்) அருள்மிகு அமிர்தகடேசுவரர் ஆலயத்திலும் 2—1—1983 ஞாயிறன்று மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. சோழநாட்டுச் சிவதலங்களில் இறுதியாகவைத்து எண்ணப்படுவது கோடிக்குழகர்கோயில். விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் கூடிய வழிபாட்டின்போது அவ்வத்தலத் திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பட்டன. பகல் 12 மணியளவில் அகத்தியான்பள்ளி திருக்கோயிலில் வழிபாட்டின் அங்கமாகச் சமயவிரிவுரை நிகழ்வுற்றது. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., 'தலப்பதிக விளக்கம்' பற்றியும், மதுரை வித்துவான் திரு. தா. குருசாமிதேசிகர் 'பக்தி' பற்றியும், ஸ்ரீமத் நெல்லையப்ப சுவாமிகள் 'ஸ்தலபுராணமும் வழிபாடும்' என்பதுபற்றியும் விரிவுரை ஆற்றினர். அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிக நூல் வழிபாட்டிற் கலந்துகொண்ட அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. சோழநாட்டுச் சிவதல வழிபாட்டின் நிறைவாகிய இவ்வழிபாட்டில் அன்பர்கள் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## குருவருளும் அருளுபதேசமும்

ஒவ்வொரு ஆங்கிலமாதத்திலும் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று காலை சரியாகப் 10 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம்பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக்கூட்டம் தருமையில் நடைபெற்றுவருகின்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் மார்கழிமாதச் சிறப்பு வழிபாட்டின்நிமித்தமாக இம்மாதம்2—1—83மாலை6-30 மணிக்கு 20 ஆவது சிறப்பு வழிபாட்டுக் கூட்டம் நிகழ்வுற்றது. முதலில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுற்றது. அடுத்துத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருத்தொண்டர்புராணச்

சிந்தனையாகப் பல அரியகருத்துக்களை விளக்கமாக உபதேசித் தருளினார்கள். முதற்கண் சுந்தரர்வரலாற்றைத் தொடர்ச்சியின் பொருட்டுச் சுருக்கமாக எடுத்தியம்பிச், சுந்தரர்திருத்தொண்டத் தொகை பாடியமையை ஒட்டி, அதன்கண் விளங்கும் அடியார் வரலாறுகளை உபமன்ய முனிவரின் சீடர்கள் முனிவரை வினவ, முனிவர் கூறும் அடியார்களின் அருள்வரலாறுகளே திருத் தொண்டர்புராணமாக மலர்ந்தது எனப் பெரியபுராண அமைப் பும் அழகும்பற்றி விளக்கினார்கள். 'தில்லைவாழந்தணர்புராணம்' இம்மாதச் சிந்தனையாக அமைந்தது. புராணத்தில் அமைந்த பாடல்களுக்கு நன்கு புரிந்துகொள்ளும்வண்ணம் விளக்கம் அருளினார்கள். 'மறுவிலா மரபின்வந்து' என்று தொடங்கும் பாடலில் 'அறுதொழில் ஆட்சியாலே அருங்கலி நீக்கியுள்ளார்' என்ற தொடருக்கு விளக்கம் அருளும்போது அந்தணர் முத்தீ வேட்டுக்கலி நீக்கும் தன்மையைக் "கற்றுங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" என்ற ஞானசம்பந்தர் வாக்கினை யும், "அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி" என்ற அப்பர் சுவாமிகள் வாக்கினையும், "கலிவலங்கெட ஆரழல் ஓம்பும்" என்னும் சுந்தரர் வாக்கினையும் மேற்கோள் காட்டி, ஒப்பிட்டு உபதேசித்தருளியமை கேட்கவும் சிந்திக்க வும் உணரவும் இனிமையாக இருந்தது. திருமயிலாடுதுறை நகரப்பெருமக்களும் மெய்யன்பர்களும் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

அடுத்து அருளுபதேசம் 6—2—83 அன்று நிகழ்வுற இருக் கின்றது. அன்பர்கள் கலந்துகொண்டு குருவழிபாடு ஆற்றி உபதேசம் கேட்டுப் பயன்பெறுவார்களாக.

## ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசர் குருபூஜைவிழா

தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருள்வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள் குருபூஜைவிழா, 1—1—83 சனியன்று குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி, விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்திவழிபாடாற்றினார்கள். மாலைவழிபாட்டின் போது "சிவபராக்கிரமக் கலிவெண்பா" விழா மலராக வெளி யிடப்பெற்று அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. காலை வழி பாட்டின் பின்னர் "ஆதீன அருள்நூல்கள்" என்ற தலைப்பில் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., 'முத்திநிச்சயம்' பற்றியும்

திருமதி. ப. நீலா எம். ஏ., 'திருவருட்பாத்திரட்டு'ப் பற்றியும் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., பி. எட்., 'சொக்கநாத வெண்பா'ப் பற்றியும் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., பி. எட்., 'சிவபோகசாரம்' பற்றியும் திரு. சொ. முத்தையன் எம். ஏ., 'நித்தியகன்மநெறிக்குறள்' பற்றியும் திரு. கா. ம. கண்ணப்பன் பி. லிட்., 'சித்தாந்தநிச்சயம்' பற்றியும் சென்னை இலயோலாக் கல்லூரித் தமிழ்த் துணைப்பேராசிரியர் திரு. அ. பாலகுருவாயன் எம் ஏ., 'நடராஜசதகம்' பற்றியும் உரையாற்றினர். பகல் மாகேசுவரபூசை நிகழ்வுற்றது. மாலை 6 மணியளவில் திருமுறை இசையரங்கினை அடுத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மாலை வழிபாடு ஆற்றியபின்னர் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் 'ஞானவரண விளக்கம்' பற்றியும் "திருக்கோயில்" ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்., 'திருத்தொண்டர் புராணம்' பற்றியும் விரிவுரை ஆற்றினர். ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும் மயிலாடு துறைநகரப்பெருமக்களும் அன்பர்களும் வழிபட்டுக் குருவருள் பெற்றுய்ந்தனர்.

## திருவெம்பாவை விரிவுரை

தருமையாதீன அருளாட்சியில் விளங்கும் திருக்கோயில் களில் திருவாதிரைத் திருவிழாவை ஒட்டி 26—12—82 முதல் 29—12—82 வரை திருவெம்பாவைவிரிவுரை தக்க அறிஞர்களைக் கொண்டு நிகழ்த்துவிக்கப்பெற்றது. வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி ஆலயத்தில் வித்துவான் திரு. மு. கோவிந்தராசனூர், சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத் தில் வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் எம், ஏ., பி. எட்., திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. சுவர்ணகாளீசுவரன், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்த கடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் பி. லிட்., திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. தா. ம. வெள்ளை வாரணம், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத் தில் வித்துவான் திரு. சு. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ., திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. சு. மு. சுந்தரராஜன் எம். ஏ., உய்யக்கொண்டான் (திருக்கற்குடி) ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. மு. வைத்தியநாதன், பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ் தானத்தில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம், ஏ., குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரர் தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. சொ. முத்தையா தேசிகர் எம். ஏ., அவர்களும் விரிவிரை

ஆற்றினர். விழா நாட்களில் திருவெம்பாவை பண்ணிசையுடன் பாடப்பெற்றது. தலபெருமக்கள் வழிபாடு ஆற்றியும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

## பொன்னூசல்விழா

*வைத்தீசுவரன்கோயிலில் :*

வைத்தீசுவரன்கோயில் எனவழங்கும் வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்தில் திருப்பொன்னூசல் திருவிழா 21—12—1982 செவ்வாய்க்கிழமை முதல் பத்துநாட்கள் நடைபெற்றது. இந்நாட்களில் இறைவனையும் இறைவியையும் ஊஞ்சலில் எழுந்தருளச்செய்து திருவெம்பாவை ஓதி வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. 30—12—82 வியாழக்கிழமை திருவாதிரை நாளில் ஸ்ரீ நடராஜர் அபிஷேகமும் திருவீதியுலாவும் சிறப்பாக நடைபெற்றன. அன்பர் பலர் வழிபட்டுப் பயனடைந்தனர்.

*சீகாழியில் ;*

சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் திருப்பொன்னூசல் திருவிழா 21—12—82 செவ்வாய்க்கிழமை முதல் பத்துநாட்கள் நடைபெற்றன, நாள்தோறும் சுவாமி, அம்பாள் பிராகாரம் வலம்வரலும் ஊஞ்சலில் எழுந்தருள்வித்தலும் காலை மாலை இருவேளைகளிலும் திருவெம்பாவை ஓதித் தீபாராதனை நிகழ்தலும் சிறப்பாக நடைபெற்றன. 29—12—82 புதன்கிழமை இரவு திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய திருப்பொன்னூசல் ஓதித் தீபாராதனை நிகழ்வுற்றது. 30—12—82 வியாழனன்று திருவாதிரை நாளில் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் வீதியுலா நிகழ்வுற்றன. அன்பர் பலர் பொன்னூசல் காட்சிகண்டும், திருவீதியுலாக் கண்டும் பயனுற்றனர்.

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம்

### 41 ஆவது திருமுறை வழிபாட்டு நிறைவுவிழா

மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம் 41 ஆவது திருமுறை வழிபாட்டுவிழா திருநகர் சித்திவிநாயகர் கோயிலில் 5—12—82 ஞாயிறு காலை 10 மணி அளவில் திரு. பி. டி. ஆர். கமலத்தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. கோயில் நிர்வாகத்தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி மன்ற அன்பர்களை

வரவேற்று வழிபாடு செய்வித்தார். மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர்வழிபாட்டிற்குரியதிருமுறைப்பாடல்களின் கருத்துகளை விளக்கி விரிவுரையாற்றினர். 'கணம்புல்லநாயனர்' பற்றிச் செல்வி. த. பத்மாவதி பேசினர். மன்றத்தின் சார்பில் வெளியிடப்பட்ட திருப்பரங்குன்றத் திருமுறைப் பாடல்களைச் சித்திவிநாயகர் சந்நிதியில் திரு. சுப்பிரமணியப் பிள்ளை வெளியிட்டார்.

திருப்பரங்குன்றத் திருமுறைப் பாடல்கள் முழுவதையும் புலவர். சி. கல்யாணசுந்தரம், கு. மணிகண்ட தாண்டவமூர்த்தி பாராயணம் செய்தனர். வித்துவான் நீ. சீ. சுந்தரராமன் திருப்பரங்குன்றப் பதிகங்களின் கருத்துக்களை விளக்கிவிரிவுரையாற்றினர். தலைவர் முடிவுரைக்குப்பின் வித்துவான் தா. குருசாமி தேசிகர் நன்றி நவின்றவுடன் விழா மங்கல வாழ்த்துடன் நிறைவுற்றது.

## சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம்

### நாயன்மார் குருபூஜை

நெடுமாற நாயனர், இடங்கழி நாயனர், சத்தி நாயனர், பூசலார் நாயனர், மூர்க்க நாயனர், சிறப்புலி நாயனர், கணம் புல்லநாயனர் ஆகிய நாயன்மார்களின் குருபூஜை முறையே 1982 நவம்பர் 1, 2, 7, 14, 16, 18, 19, 30 ஆகிய தேதிகளில் நிலையபூஜை மடத்தில் நடைபெற்றது. புலவர் திரு. கே. ஆறுமுகம் அவர்கள் பெரியபுராணம் வாசித்து விளக்கவுரை நிகழ்த்தினர்கள். ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களும் நிலைய அன்பர்களும் கேட்டுப் பயன்பெற்றனர்.

### சோமவாரக் கயிலைப் பிரார்த்தனை

1982 நவம்பர் 1, 8, 15, 22, 29 ஆகிய சோமவாரத் தேதிகளில் நிலைய பூஜைமடத்தில் கயிலைப் பிரார்த்தனை நடைபெற்றது. நிலைய ஓதுவார், ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களுடன் கயிலைப் பதிகங்கள் பாடி, தீபாராதனை செய்து பஞ்சபுராணம் பாடி வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. பிரார்த்தனையில் நிலைய அன்பர்களும் கலந்துகொண்டார்கள். எல்லோருக்கும் நிவேத்தியப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

### கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

வைத்தீசுவரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 4—11—1982 தேதி வியாழக்கிழமை மாலை 6–30 மணிக்கு

நிலைய மன்றத்தில் நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு நிலைய ஓதுவார் திரு. டி. எஸ் தண்டபாணி தேசிகராலும் திரு. என். இராமமூர்த்தி அய்யராலும் வேளூர்ப் பதிகங்களும் முருகன் நாமாவளிகளும் பாடப்பெற்றன.

திரு. ஏ. நாராயணசாமி அய்யர் வரவேற்புரைக்குப்பின், விழாவிற்குத் தலைமைவகித்த திரு. வி. என். ஆறுமுக முதலியார் பேசுகையில், வேளூர்ப் பதிகங்களைத் தவறுமல் ஓதினால் நல்ல பலன்கிடைக்கும் என்றும், அப்படி வைத்தியநாதப்பெருமானை வழிபடாதவர்கள் நரகக்குழியில் அழுந்துவர் என்று ஸ்ரீ அப்பர் வாக்கிலே கூறப்படுகிறது என்றும், உள்ளம் உருகி இறைவனை வழிபட்டால், மெல்ல நம் வினைகள் கெடும் என்றும் கூறி, ஸ்ரீ அப்பர் தேவாரப்பாடல்களைப்பாடி விளக்கமும் தந்தார்கள். நம்மை எல்லாம் அருள்நெறியில் செலுத்துகின்ற தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு வணக்கம் தெரிவித்துக்கொண்டார்கள். வந்திருந்த அன்பர்களுக்கு வேளூர்ப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

## கந்தசஷ்டி விழா

16—11—82 முதல் 21—11—82 முடிய நிலைய மன்றத்தில் கந்தசஷ்டி விழா சிறப்பாக நடைபெற்றது. ஆறு நாட்களிலும் தினந்தோறும் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்யப்பெற்றது. அதை அடுத்து நிலைய ஓதுவார் திரு. டி. எஸ். தண்டபாணிதேசிகரும், திரு. என். இராமமூர்த்தி அய்யரும் முருகன் பிள்ளைத்தமிழ், கந்தர் அனுபூதி முதலியவற்றைப் பாடினுர்கள். அதைத் தொடர்ந்து தினந்தோறும் வில்லிபாரதச் செம்மல் நக்கீரன் திரு, D. முகுந்தன் அவர்களால் கந்தபுராண விரிவுரை நடைபெற்றது.

16—11—82 சென்னை உயர்நீதி மன்றம் ஓய்வுபெற்ற நீதிபதி கனம் திரு. வி. சேதுராமன் அவர்கள் தலைமை வகித்து இவ் விழாவைத் துவக்கிவைத்தார்கள். அவர்கள் பேசியதன் சுருக்கமாவது :- அமைதிநிலவும் தி நகரில் 29 ஆண்டுகளாக தருமையாதீனம் சமயப் பிரசாரப் பணியைத் தொடர்ந்து நடக்திவருகிறது. இன்றையதினம் கந்தசஷ்டி விழா தொடங்குகின்றது. இராமாயணம், பாரதம் போன்றவற்றில் எதிரிகள் அழிக்கப் பட்டனர். நாம் இப்பொழுது கொண்டாடுகின்ற கந்தசஷ்டி விழாவில் எதிரி ஆட்கொள்ளப்படுகிருன். இது புராணத்தின் சிறப்பு.

21—11—82 நிறைவு பெற்ற இவ்விழாவில் தமிழ்மொழிக் காவலர் திரு. கீ. இராமலிங்கனூர் அவர்கள் தலைமை வகித்து பேசியதின் சுருக்கமாவது :- குமரகுருபர சுவாமிகள் அருளிய கந்தர் கலிவெண்பாவை எல்லோரும் நன்கு ஓதவேண்டும். நான் கல்வி பயிலுங்காலத்து இடர்வந்தது. தோல்வியைத் தழுவினேன். அப்பொழுது கந்தர்கலிவெண்பாவையும் கந்தர் அனுபூதியையும் பாராயணம் செய்தேன். உடன் வெற்றி கிட்டியது. பாம்பன் சுவாமிகளுக்கு குதிரைவண்டிஏறி கால் எலும்பு முறிவு ஏற்பட்டபோது மருத்துவர் காலை எடுத்துவிட வேண்டும் என்றனர். சுவாமிகள் முருகப்பெருமான்மீது அழுத்தமான நம்பிக்கை கொண்டு சண்முகக் கவசத்தைப் பாராயணம் செய்து கால் நலம் பெற்றுத் திகழ்ந்தார்கள். என் நண்பர் ஒருவர் கொலைக் குற்றத்திற்காக ஆயுள் தண்டனை பெற வேண்டியவர், திருமுருகாற்றுப்படையைக் காலை, மாலை இரு வேளைகளும் ஓதி ஏழாண்டு தண்டனைபெற்று விடுதலையானர். இறைவனை நம்பிக்கையோடு துதித்தால், எல்லா நலன்களையும் அருளுவான் என்று கூறினர்கள்.

## திருக்கடவூர் சங்காபிஷேகத் தீர்த்தப் பிரசாதம் வழங்கும் விழா

22-11-82 — 29-11-82 ஆகிய இரு கார்த்திகைச் சோமவார தினங்களில் திருக்கடவூரில் நடைபெற்ற 1008 சங்காபிஷேகத் தீர்த்தப்பிரசாதம் முறையே 23-11-82, 30-11-82 ஆகிய இரு தேதிகளிலும், மாலையில் நிலைய மன்றத்தில்பிரார்த்தனை நிகழ்த்தி நிலைய அன்பர்களுக்கும் இதர மெய்யன்பர்களுக்கும் வழங்கப் பெற்றது. பிரசாதம் வழங்கப்பெற்ற இரு தினங்களிலும் ஸ்ரீ அபிராமியம்மைக்கு அர்ச்சனைசெய்து நிலைய ஓதுவார் திரு. டி. எஸ். தண்டபாணி தேசிகர், திரு, என். இராமலிங்கம், திரு. என். இராமமூர்த்தி அய்யர் ஆகியோரால் திருக்கடவூர் திருப் பதிகங்கள் முழுமையும் பாராயணம் செய்யப்பெற்றது.

23—11—82 நடைபெற்ற முதல்வார விழாவிற்குத் தலைமை வகித்த வித்துவான் திரு. பி. வடிவேல் பிள்ளை அவர்கள் பேசுகையில், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றுலும் சிறப் புற்ற ஸ்ரீ அமிர்தகடேசுவரப் பெருமானின் அருட்பாடல்கள் சிலவற்றை உள்ளம் உருகப்பாடி விளக்கம் செய்தார்கள். அத் தலத்தில் தோன்றிய குங்குலியக்கலய நாயனர், காரி நாயனர் ஆகியோரின் பெருமைகளைக் கூறினர். தோன்றுத்துணையாக இருக்கின்ற ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவடிகட்கு வணக்கம் கூறினர்கள்.

30—11—82 நடைபெற்ற இரண்டாவதுவார விழாவிற்குத் தலைமைவகித்த சென்னை அட்வகேட் திரு. P,A.தெய்வசிகாமணி அவர்கள் பேசுகையில், மனிதன் மனோதைரியமும், ஆத்ம – ஆன்மீகசாந்தியும் பெறவேண்டுமானால், திருக்கடவூர் அபிராமி அம்மையின் பாடல்களைப் பயிலவேண்டும். அவைகள் கல்வி ஐஸ்வரியம் முதலியவற்றை நல்கும். நல்லுடல்பெற்று நீண்ட நாள் நோயின்றி மனோதிடத்துடன்வாழ, திருக்கடவூர் காலசம் ஹாரமூர்த்தியையும், அமிர்தகடேசுவரரையும் தொழவேண்டும் என்றார். அங்கு பேறுபெற்ற மார்க்கண்டேயர் முதலிய அடியார் களின் வரலாற்றையும்கூறி தனது உரையை முடித்துக்கொண் டார்கள்,

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னை சமயப் பிரசார வழிபாடு 28—11—82 ஞாயிற்றுக் கிழமை மாலை 4-25 மணி முதல் இரவு 8-30 மணி வரை சென்னை வடபழனியை அடுத்துள்ள வளசரவாக்கம் என்ற ஊரில் ஸ்ரீ அகத்தீசுவரசுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்யப்பெற்றது. (இந்தக் கோயிலில் அம்பாள் பிரதிஷ்டை செய்யப்படவில்லை.) கோயிலில் உள்ள இதர மூர்த்திகளுக்கு அர்ச்சனை செய்யப் பெற்றது. வழிபாட்டின்போது நிலையஓதுவார் திரு. தண்டபாணி தேசிகர், திரு. N. இராமலிங்கம், திரு. N. இராமமூர்த்தி அய்யர் ஆகியோர் திருமுறைப் பாராயணம் செய்தனர். வழிபாட்டிற்குப் பிறகு நடைபெற்ற சமயப் பிரசாரக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. K. V. கமலநாபன் அவர்கள் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இவ்வித மான கூட்டு வழிபாட்டின் சிறப்புக்களையும் முக்கியத்துவத்தை யும் எடுத்துக்கூறி இதில் எல்லோரும் பெருமளவில் கலந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்

கூட்டத்தில் பங்குபெற்ற புலவர் திரு. A. [ . இராமசாமி முதலியார் அவர்கள் மேற்படி கோயிலைப்பற்றியுள்ள விவரங் களைத் தாமாகவே கவிதை வடிவில் எழுதிவந்து வாசித்தார்கள். அடுத்துப்பேசிய புலவர் திரு. N. இராசு அவர்கள் எல்லோரும் இறைவனைத் தவறாது வழிபட்டு நற்பயனைப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். பிரதோஷ தினத்தில் நடை பெற்ற வழிபாட்டிற்கு நிலைய அன்பர்களும் உள்ளூர்வாசிகளு மாக அதிக அளவில் கலந்துகொண்டு வழிபாடு நடந்த முறை யைக்கண்டு பெருமகிழ்ச்சியடைந்தனர்.

உ

# எதிர்காலம்

★

## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துந்துபி௵ தைமீ 1௳ முதல் 30௳ முடிய)

(14—1—1983 முதல் 12—2—1983 முடிய)

| | | | |
|---|---|---|---|
| | | | ரா ல/ |
| செ | இராசி | | |
| சூ சுக் சந் | | | |
| கே பு | கு | சனி | |

| | | | |
|---|---|---|---|
| | | சந் கு சு | கே |
| | அம்ஸம் | | |
| | | | |
| ல/ ராகு | செ சனி | கு | பு |

துந்துபி௵ தைமீ 1௳ சுக்கிரவாரம் உத்திராட நக்ஷத்திரம் கிருஸ்துக்கான கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 23 நாழிகை 2 விஞடிக்கு மிதுன லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சக ரான ஸ்ரீ சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு தனுர் ராசியிலிருந்து மகர ராசி சங்கிரமணமாக தைமாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று உத்திராயண புண்ணிய காலமாகும், சங்கிரமணதேவதை மிச்சிரகா. அவர் தயிர் ஸ்நானம் செய்து பட்டுஉடுத்தி ஜவ்வாது பூசி கொங்குமரத்தின் மலர் சூடி முத்து ஆபரணம்பூண்டு திரிபு பாத்திரத்தில் சர்க்கரை உண்டு வில்லும் வாளும் ஏந்தி கோழிவாகனம் ஏறி சுவர்ண குடையின்கீழ் படிகசாமரம் வீசப்பெற்று வேணு வாத்தியம் முழங்ககிழக்குத்திசைநோக்கி வடக்காகப்பிரயாணம்செய்கிருர். அதன்பயன் வனப்பொருள் விருத்தியாகும். அற்பர்கள் வீழ்ச்சி அடைவார்கள். பசு பால் பெருகும். நல்லவர்கள் ஆன்ருேர்கள்

ஈசுவரகடாக்ஷத்தினல் தியாக உணர்வில் உறுதியாகச் செய லாற்றுபவர்களாக சிவதர்மம்காப்பர். உலகில் மன்னர்களுக்குள் போர்முழக்கம் நாடுகளில் ஊடுருவும் இவை நிகழும், தக்கவர் களின் நீதி உரையினல் அவை நின்று சமரசமாகும். அத்துமீறு தல் நீங்கும்,

உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈசுவரகட்டளையில் சிவசமயகர்த்தாக்களாக அவதாரமாகிவந்து நித்தியம் பரமனைப்பூசிக்கின்ற சிவஞானகுருமகான்கள் குருமகா சந்நிதானங்கள் லோகிற்கு சிவதர்மம், நீதிமார்க்கம், வேதம் கலாசாரம் இவை இயம்பி அவ்வழி அனுஷ்டித்து உயர அருளிச் செய்வார்கள், லோகமெங்கும் சிவசமயம் பரவும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகாலபூசைகள் சாஸ்திர விதிமுறைகளின்படி நடைபெறும்; எல்லாப்பிரஜைகளும் தேவா லயம் சென்று தெய்வதரிசனம் செய்து ஆனந்திப்பர்; திரிகரண சுத்தியாக இனிது வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – ¼
(சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்களில் நல்லஸ்திதியை ஏற்படுத் தும். ஜனவரி 26உ ஆனல் ஓர் திரண்டபொருள் கைக்குவரும். பூமியில் இயந்திரங்களில் அபிவிருத்திபலன் ஏற்படும். வீடு வாகனப்பிராப்தியில் நல்ல சௌகரியங்களை ஏற்படுத்தும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஜனவரி 14, 15, 16, 17, 18. 22, 23, 26, 27. பிப்ரவரி 2, 3, 4, 11, 12 தேதிகளில் தனுதாயம். காரியசித்தி, அரசாங்க அனுகூலம் ஆகிய நற்பலன் கள் ஆகும், ஜனவரி 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½
(இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். உடன் நல்ல காரியங்களில் செலவும் ஆகும். வித்தியா வியா பாராதிகளில் கலைத்துறையில் நல்ல புகழ் ஏற்படும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு களிப்புறும் சம்பவங்கள் நிகழும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஜனவரி 17, 18, 19, 20, 21, 24, 25, 28, 29, பிப்ரவரி 4, 5, 6, 7 தேதிகளில்

தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். பிப்ரவரி 8, 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம்

( கா. கி. - கு. க. ஸ. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். மனுேதைரியப்போக்கில் எல்லாக்காரியங்களையும் நடத்தும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியங்களை ஏற்படுத்தும். மாதக் கடைசியில் ஓர் நூதன வஸ்துவின் பிராப்தியையளிக்கும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஜனவரி 19, 20, 21, 22, 23, 26 27, 30, 31 பிப்ரவரி 6, 7, 8, 9, 10 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜனவரி 14, 15, 16. பிப்ரவரி 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம், மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்,

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

( ஹி. – ஹ ு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும் குடும்பாபி விருத்தியில் பணவருமானம் வந்துகொண்டிருக்கும். சம்பிர தாய விஷயத்தில் மதிப்புடன் செலவும் ஆகும். பூஷணங்களின் பிராப்தியையளிக்கும். வித்வத்துவம் கலைத்துறைகளில் புதுமை கண்டுபிடிப்புகளில் அதிக சிந்தனையைச் செலுத்தும். ஜனவரி 25 தேதியானுல் பிறர் சொத்தில் ஒரு பரிவர்த்தனை ஆகும். ஜனவரி 14, 51, 16, 22, 23, 24, 25, 28, 29 பிப்ரவரி 2, 3, 8, 9, 10, 11, 12 தேதிகளில் தனுதாயம், ஊக்கசிந்தனை, நற்காரியம் முடித்தல் ஆகிய நற்பலனுகும். ஜனவரி 17, 18 தேதிகள் சந்திராஷ்டம மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

( ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் கணிசமாகவரும். பூமியில் இயந் திரங்களில் நற்பலன்வரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத் துறையில் முன்னேற்றம் ஏற்படும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்துவரும் புத்திரர் பௌத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜனவரி

14, 15, 16, 17, 24. 25, 26, 27, 30, 31 பிப்ரவரி 4, 5, 11, 12 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜனவரி 19, 20. 21 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½
(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்யாராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் நல்லபணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சுபவிசேஷங்களில் கௌரவச் செலவும் ஆகும். சாஸ்திரசம்பிரதாயங்களின்படி எல்லாக்காரியங்களையும் நடத்துதல் ஆகும். வீடுவாகனப் பிராப்த்தியில் நல்லசௌகரியங்களை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 17, 18, 19, 20, 21, 26. 27, 28, 29, பிப்ரவரி 2, 3, 6, 7 தேதிகளில் மிகுந்த நற்பலன் தரும். ஜனவரி 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾
(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரப்பலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் பெருமதிப்பாகவந்துகொண்டு இருக்கும். பூஷணங்களின் பிராப்தியை அளிக்கும். வாகனசுகம் திருப்தியளிக்கும். தெய்வபக்திமிகும். வித்துவத்துவம்கலைத்துறைகளில் ஒப்பந்தங்கள் கொடுக்கல்வாங்கலில் நல்லபிரயோஜனம் வரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 19, 20, 21, 22, 23, 28, 29, 30, 31 பிப்ரவரி 4, 5, 8, 9, 10 தேதிகளில் தனதாயாதி நற்பலனளிக்கும். ஜனவரி 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.
(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் கணிசமாக வரும். வித்தியாவியாபாராதிகள் முன்னேற்ற ஸ்திதியில் விளங்கும். புத்திரபிராப்த்தி ஒன்று ஏற்படும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் இருந்துவரும். நெருங்கிய அன்புக்குரியவர் ஒருவரை பிரிதல் ஆகும். ஜனவரி 14, 15, 16, 22, 23, 24, 25, 30, 31 பிப்ரவரி 1, 2, 3, 6, 7, 11, 12, தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜனவரி 26, 27 தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$
( யே, யோ பா. பி. - பு. த. ப. ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் தனவருமானங்களில் நல்ல ஸ்தியை ஏற்படுத்தும். சுபவிசேஷங்களில் செலவும் ஆகும். மனேதைரிய போக்கில் எல்லாக்காரியங்களையும் நடத்திக் கொண்டிருக்கும். வித்தியாவியாபாராதிகளில் கலைத்துறைகளில் பிப்பரவரி 9 உ ஆனுல் நல்ல நிலைமையும் அரசாங்க நன்மையும் ஏற்படுதலும் ஆகும். ஜனவரி 17, 18, 24, 25, 26, 27 பிப்ரவரி 2, 3, 4, 5, 8, 9, 10 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜனவரி 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$
( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். அடிக்கடி அவசிய செலவினங்களும் ஏற்படும். அவசர வார்த்தையினுல் காரியங்களில்காலதாமதமாகிப் பின் அனுகூலம்தரும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்துவரும். அரசாங்க கௌரவம்தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜனவரி 19, 20, 26, 27, 28, 29 பிப்ரவரி 4, 5, 6, 7, 11, 12 தேதிகளில் தனுதாயம் காரியசித்தி ஆகிய நற்பலன் ஏற்படும். ஜனவரி 30, 31 பிப்ரவரி 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$
( கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும் ஸ்திரிவழியினர் நலனுக்கு முக்கிய செலவினை ஏற்றுச்செய்தல் ஆகும். வீடு வாகன வசதியில் ஓரளவு பணம் முடங்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் செய்தொழில் உத்தியோகம் இவற்றில் உயர்ந்தஸ்திதியும் ஆதாயபலனும் ஏற்படும். எல்லா விஷயங்களிலும் மிடுக்கானதோரணையில் காரியங்களை நடத்திக் கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஜனவரி 17, 18, 22, 23, 28, 29, 30,31 பிப்ரவரி 1, 6, 7, 8, 9, 10 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். பிப்ரவரி 2, 3, தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

**12.** மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.
( தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் நல்ல பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும் வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் எலக்டிரிக் தொழில் இரசாயனம் இவற்றில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புத்திர பிரஸ்தி ஒன்று ஏற்படும். மனைவியின் மனக்குறை நிவிர்த்தி யாகும். ஜனவரி 14, 15, 19, 20, 21, 24, 25, 30, 31 பிப்ரவரி 1, 2, 3, 8, 9, 10, 11, 12 தேதிகளில் நல்ல தனதாயம், கௌரவம் பிர விருத்திகளில் முன்னேற்றம் ஏற்படும். பிப்ரவரி 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

---

## கடிதம்.

நான் தமிழ் மருத்துவத்தில் மிகவும் ஆர்வம் உள்ளவன், தருமையாதீனத் திங்கள் இதழில் வருகின்ற, தஞ்சை, திரு, நா. தனுக்கோடி அவர்களின் மருத்துவக் கட்டுரைகள் மிக்க பய னுள்ளதாக உள்ளது.

என்னுடைய மகள் கனிமொழி வயது ஒன்று. உடல் நலக் குறைவு ஏற்பட்டு இருமல், சளி, வயிற்றுவலி போன்ற நோய் களால் மிக அவஸ்த்தைபட்டது. ஆங்கில மருத்துவ டாக்டர் களிடம் காண்பித்தும் ஊசிகள் போட்டும் குணம் கிடைக்க வில்லை. தங்கள் மாத இதழில் வெளிவந்த ஓமம் கட்டுரையை பார்த்தேன். அதில்உள்ளபடிஓமத்தைப்பொடித்துதுளசிசேர்த்து அடிக்கடி கட்டுரையில் சொல்லியதுபோல் செய்துவந்தேன், வயிற்றில் உள்ள பூச்சிகள் வெளிவந்ததுடன் இருமல், சளி மிகவும் பூர்ண குணம் அடைந்து சுகமாக விளையாடுகிறாள். எனக்கும் என் குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் மிக்க மகிச்சி யாக இருக்கிறது. ஆகவே தினம், தினம் உழைத்து வேலைசெய்து பிழைக்கக்கூடிய எங்களைப்போன்றஏழைகளுக்குத்தங்கள்மாத இதழில் வரும் மருத்துவக் கட்டுரைகள் பயன் உள்ளதாக உள்ளதுஎன்பதை மிகவும்மகிழ்ச்சியுடன்தெரிவித்துக்கொண்டு மேலும் அடிக்கடி தமிழ்மருத்துவக் கட்டுரைகளைப் போடும்படி மிக வேண்டி வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

3—1—83 **பொன். சுப்பிரமணியம்.** மாங்குடி.